


# தென்மொழி

## வருங்காலம் தமிழர்க்கே!

நெடுங்காலம் முன்பே, நம்
    தமிழர்க்கு விழுந்துவிட்ட
    இனக்கூனே நிமிர்ப்ப தென்றல்,
கடுங்கால வினைமுயற்சி
    தேவையென மொழி, இன, நாட்
    டுரிமையினர் உணர்தல் வேண்டும்!
கெடுங்காலம் இனும் நமக்குப்
    போகவில்லை; உட்பகையும்
    மறைய வில்லை! எனினும் நன்மை
அடுங்காலம் தொலைவிலில்லை;
    அன்றன்றும் அடுத்தடுத்தும்
    முயன்றிடுக! முயற்சி வெல்லும்!

பகைவர்க்கு வலிவில்லை;
    நம்மைவிட அறிவில்லை;
    பரவிவிட்ட நோய்நம் நோயே!
தகைவர்க்குக் குறைவில்லை.
    தருமுழைப்பும் கேடில்லை;
    தாழ்வெல்லாம் நாம்செய் தாழ்வே!
தொகை நிறைந்த தொண்டர்க்கும்
    தொய்வில்லை; துணிவிற்கும்
    தாழ்வில்லை; தொன்மை எண்ணி
வகைசெய்து திட்டமிட்டுப்
    போரிட்டால் வருங்காலம்
    தமிழர்க்கு வாழ்கா லம்மே!




சுவடி : 23
ஓலை : 7

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
உ ருபா: 1-75

# நமக்கு வந்த மடல்கள்.

O:1225: அய்யா, வணக்கம். தென்மொழி (சுவடி 23 ஓலை5) இதழில் விடுதலை வேட்பன் 'வர்க்கப் போராட்டமும்-போராட்டப் பெருநடையும்' என்ற தலைப்பில் எழுதியுள்ளார். அவரது தொகுப்பில் 1. தமிழகத்தைத் 'தமிழ்த்தேசிய முதலாளிகளின்' சுரண்டல்களிலிருந்து மீட்டெடுப்பது என்றும், 2. இட ஒதுக்கீட்டு வழியாகப் புரட்சிக்கு வழிதேடிய குமுக சீர்திருத்த இயக்கங்கள் —இட ஒதுக்கீட்டுச் சிந்தனையிலிருந்து இடத்தைப் பெயர்க்காமல் தேங்கி விட்டன, என்றும் 3. தமிழக விடுதலைப் போராட்டத்தைச் செயலளவில் பொருளியல் சிக்கலைக் கையில் எடுக்காமல், வெறுமனே குமுக உணர்வினை மட்டுமே எடுத்ததினால்தான் பெரியாரின் செயல்பாடு வெற்றியளிக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் உள்ள 'சில' அரை வேக்காடுகள் மார்க்சிய —இலெனினிய 'அரை வேக்காட்டுத்தனத்துடன்' படித்துவிட்டு 'எழுதிக்கொண்டும் - பேசிக் கொண்டும்' வருகின்றனர். அதில் தோழர் விடுதலை வேட்பனும் அடக்கம். இவர்கள் மார்க்சியத்தை 'இயந்திர' வகையில் படித்துவிட்டு, இயந்திர முறையில் அதை இந்நாட்டில் பொருத்திவிடப் புறப்பட்டுள்ளனர்.

1. எத்தனைத் தமிழ்நாட்டு முதலாளிகள் தமிழ்நாட்டு விடுதலைக்குக் குரல் கொடுக்கிறார்கள்? தமிழ்த் தேசிய முதலாளிகள் என்றால் எப்படி? யார்-யார் அந்தத் தமிழ்த் தேசிய முதலாளிகள்?

2. தந்தை பெரியார் இட ஒதுக்கிடு பெற்று விட்டாலே புரட்சி வந்துவிடும் என்று எப்போது கூறினார்? அல்லது அவரது இயக்கம் அந்த இடஒதுக்கீட்டுக்குச் சிந்தனையிலே மட்டும் தன்னைத் தேக்கி வைத்திருக்கிறது என்பதற்கு என்ன அடிப்படை?

3. தந்தை பெரியார் பொருளியல் சிக்கலைக் கையில் எடுக்காமல்நாட்டு விடுதலையை முன்னெடுத்தாரா? அரசியல் -பொருளியல்-குமுகாய நிலையின் ஆணிவேர்களைப் பெரியார் எடுத்துரைக்க வில்லையா? அதற்காகப் போராட வில்லையா?

தந்தை பெரியாரைப்பற்றி - அவருடைய கொள்கைகளைப் பற்றி ஏதும் அறியாமல் — படிக்காமல் - படித்ததை ஒழுங்காகப் புரியாமல் எழுதித் திறனாய்வுக்கு உட்படுத்துவது 'அறிவு' நாணயமற்ற செயலல்லவா?

நம்மை அடிமைப் படுத்தியிருப்பவர்களில் எதிரிகள் பார்ப்பன வணிகர்கள், தேசிய முதலாளிகள் என்பவராம்! எனனே மார்க்சியக்(!) கண்டுபிடிப்பு?

ஆரியமும் திராவிடமும் மாயை என்று சொல்லாத ஒன்றைத் தூக்கிப்பிடித்து இல்லாத ஒன்றை எடுத்து அதற்குப் பக்கம் —பக்கமாக விளக்கமளித்துப் புதிய பார்ப்பனியக் குழப்பத்தை உண்டு செய்யும் அறிஞர்கள் நிறைந்த நாடு இது! எனவேதான் அதற்குத் தென்மொழியில் — தமிழ் நிலத்தில் விளம்பரம். விளம்பரம் ஒரு பக்கம்! ஆசிரியர் உரையில் அதற்கு மறுப்பு ஒரு

(தொடர்ச்சி அட்டை 3- ஆம் பக்கம் பார்க்க)



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

*[நிறுவனம் தி. பி. 1990 (1959)]*



# தென்மொழி

மொழி — இனம் — நாடு.

**நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல் களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்
ஆசிரியர்: மா. பூங்குன்றன். க. மு.
புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி எசுஆர். பிரான்சிசு, தென்மொழி கா. இளமுருகன், தென்மொழி த. தானியேல் செபராசு, தென்மொழி அரசத் தொகையன், பாவலர். சா. சி. சுப்பையா, பாவலர். அ. பு. திருமாலனார், தென்மொழி த. அரிமா வளங்கோ; பொன். பாலகிருட்டிணன்; தென்மொழி இரா. பாலகங்காதரன் *(தொலைபேசி : 847829)*

சுவடி 23] உ௦௩௭ கடகம்-மடங்கல் (சூன்-ஆக. '87) [ஓலை 7

# இந்தியாவில் எடுத்த எடுப்பில் பொருளியல் புரட்சியை உருவாக்க முடியுமா?-3



நாட்டைத் திருத்துதற்கோ, மக்களிடையே ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்துதற்கோ, முற்படும் இளைஞர்கள் முதலில் அத்தகைய விளைவுகளைத் தம்முள் காணுதல் வேண்டும். எவ்வெத் தீமைகளை இளைஞர்கள் அகற்ற விரும்புகின்றனரோ, அவ்வத் தீமைகள்

முதலில் தம்மைப் பற்றுதவாறு அவர்கள் முதலில் தம்மைச் சீர் திருத்திக் கொள்ளுதல் வேண்டும். சாதிகளை ஒழிக்கப் புறப்பட்ட இளைஞர்கள் தாங்கள் சாதிப் பற்றுளர்களாக இருந்தால் எப்படி? மத வேறுபாடுகளையோ, அல்லது மதங்களையோ ஒழிக்க முற்பட்ட இளைஞர்கள், தாங்கள் மதச்சேறுகளில் கால் வைத்துக் கொண்டி-ருந்தால் என்ன விளைவுகளை உருவாக்கி விட முடியும்?

இக்காலத்தில் இவ்வாறு சீர்திருத்த நோக்கம் கொண்ட இளைஞர்களிடையே முன்னைய தலைமுறையினரை விட சாதி நோக்கம் அதிகம் குடிகொண்டிருப்பதைப் பார்க்கலாம். ஓர் இளைஞன் தான் கற்ற கல்வியால் பெருமை கொள்வதை விடத் தான் பிறந்த சாதியால் பெருமை கொள்கிறான். அதே போல், தான் கல்விகற்க வேண்டும், தன் ஏழ்மையைப் போக்கி கொள்ள வேண்டும் என்னும் நோக்கங்களுக்காகத் தனக்குள்ள உரிமையை நிலைநாட்டிக் கொள்ள முற்படாத இளைஞன், தன்சாதித் தாழ்வை முன்வைத்தும், பிறப்பிழிவைத் தூக்கிப் பிடித்தும், சலுகை முறையில், அதிகாரத்தால் அடக்கி ஒடுக்கும் அரசிடையில், கேட்டும் கெஞ்சியும், கொடுத்தும் குனிந்தும், தனக்கு வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ள முனைகின்றான். முந்தைய தலைமுறை யினரைப் போல், தன் பெயருக்குப் பின் வால்போல் சாதியைத் தான் ஒட்டவைத்துக் கொள்ள விரும்ப வில்லையாயினும், உள்ளத் தில் வைத்துப் பூட்டிக் கொண்டு, தேவையான இடத்தில் தேவை யான முறையில், தேவையான செயல்களை ஈடேற்றிக் கொள்-வதற்காக, அதனைத் திறந்து காட்ட விரும்புகின்றான்.

தன் மனைவியைத் தேடிக்கொள்ள ஒருவனுக்குச் சாதி தேவைப் படுகிறது. தனக்கொரு பணியைத் தேடிக்கொள்ள சாதியை ஒரு செலாவணிப் பொருளாகப் பயன்படுத்துகிறான். தன் குடும்பத்தை ஒற்றுமையுடன் நடத்திச் செல்லவும், தன் உற்றார் உறவினர்களொடு சேர்ந்து வாழவும், சாதி முத்திரை-யைக் குத்திக் கொள்ள விரும்புகிறான். உணவில் சாதி; உறையு ளில் சாதி; உறவாட்டத்தில் சாதி, இப்படி தன் இயக்கத்தில் ஏறத்தாழ பாதிஅளவைச் சாதியின் பெயரால் நிறைவேற்றிக் கொள்ள விரும்புகிறான். இந்நிலையில் புரட்சியுணர்வை இவனால் எவ்வாறு முழுமையாக்கிக் கொள்ள முடியும்?

இனி, அடுத்து, இக்கால இளைஞர்கள், ஏதோ ஒரு பொழுது போக்கிற்காக, ஒரு குழுவுணர்ச்சிக்காக, ஒரு வீர தீரச் செயலை நாமும் செய்தோம் என்று பெயர் பண்ணுவதற்காகவே, ஏதோ புரட்சி, புதுமை, பொதுமை பேசுகிறார்களே யொழிய, அவர்-களில் மிகப் பெரும்பாலோர், ஏறத்தாழ தொண்ணூற்று ஐந்து பங்கினர் பணத்துக்கே அடிமையாகிக் கிடக்கின்றனர்; எதற் கெடுத்தாலும் அவர்களுக்குப் பணம் தேவைப் படுகிறது பணம் ஓர் இன்றியமையாத உருவாக்கப் பொருள் என்பதை எவருமே மறுத்து விட முடியாதுதான் என்றாலும், அதைப் பரவலாக்கு கின்ற முயற்சியில், அதுவே முதற்பொருள்தான் என்றாலும்,

அஃது ஒரு கருவி யென்னும் அளவிலேயே நமக்குத் தேவை என்று கருதுதல் வேண்டும். அதையே வாழ்க்கை என்று எண்ணி மதிப்பிட்டு விடுதல் கூடாது. ஓர் அரிய பொத்தகத்தை வாங்கு வதற்கு நமக்கு ஆயிரம் உருபா தேவையாக இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அதே சமயம் நம் மனைவி கேட்கின்ற பட்டுச் சேலையை வாங்கவும் ஆயிர உருபா தேவை என்றும் வைத்துக் கொள்வோம். இந்நிலையில் ஓர் ஆயிர உருபா கிடைத்தால், இன்றுள்ள இளைஞர்களில் பெரும்பாலோர், மிகப் பெரும் பாலோர், தங்கள் மனைவியரின் ஆசையை நிறைவேற்ற பட்டுப் புடவை வாங்கவே அதனைப் பயன் படுத்துவர். கொஞ்சம் அறிவுள்ள இளைஞன் பொத்தகத்தை வாங்கவே விரும்புவான். ஆனால், இவ் விரண்டையும் தவிர்த்து விட்டு, எவனொருவன் அப் பணத்தைத் தன் கொள்கையை வளர்க்கவும், அதனைச் செயல் படுத்தவும், அல்லது தனக்காகும் போரட்டக் கருவிகளை வாங்கவும், பயன்படுத்துகின்றானோ, அவனே புரட்சிக்கு வித்தானவன். அவனைப் போலும் இளைஞர்கள் இக் காலத்தில் எத்தனைப் பேர் இருப்பர்?

காலத்திற்கும், இடத்திற்கும், மக்கள் நலத்திற்கும், புரட்சிப் போக்கிற்கும் எவன் முதலிடம் கொடுக்கின்றானோ, அவனே புரட்சியாளன். இதுவன்றித் தனக்கும், தன் குடும்பத்திற்கும், மனைவி மக்களுக்கும், தான்பிறந்த சாதிக்கும், தன்னைச் சுழற்றிக் கொண்டிருக்கும் மதத்திற்கும் எவன் முதலிடம் தருகின்றானோ, அவனே பிற்போக்காளன்; புரட்சிக்கு முட்டுக் கட்டையாக இருப்பவன். இவ் விலக்கணப்படி நம் இளைஞர்களிடையே எத்தனை விழுக்காட்டினர் புரட்சியாளராகவும், பிற்போக்காளர்களாகவும் இருப்பார்? இதைப் படிக்கின்ற இளைஞர்களில் எத்தனைப்பேர் புரட்சிக்கு முன்வருவர்? அவர்கள் தம் நெஞ்சங்களின் மீது கைகளை வைத்துக் கூறட்டும். அவர்கள் மக்கள் புரட்சிக்கு முழு அணியமானவர்கள்தாமா? பின், நம் இளைஞர்களிடையில் வெற்று முழக்கங்கள் எதற்கு? வீண் ஆரவாரம் ஏன்? தம்மைப் பிற்போக்காளர் அணியில் சேர்த்துக் கொள்ள விரும்பாதவர்களே இன்று தங்களைப் புரட்சியாளர்கள் என்று முத்திரை குத்திக் கொள்ள விழைகின்றனர். ஆனால் அவர்கள் பெயரளவில்தாம் புரட்சியாளர்களாக உலா வர விரும்புகின்றனரே தவிர, செயலளவில் மிகப் பிற்போக் காளர்களாக இல்லா விடினும், ஓரளவு பிற்போக்குத் தன்மை வாய்ந்தவர்களே! இவர்கள் மற்றவர்களை உண்மையான புரட்சியாளர்கள் இல்லையென்று சந்துபொந்தெல்லாம் பேசிக் கொண்டு பெரும்பாலும் பிறரைக் குறைகூறிக் கொண்டு திரிகின்றார்கள். உண்மையான புரட்சியாளனுக்குத் தன் கொள்கை முனைப்புகளைப் பற்றியே சிந்திப்பதற்கு நேரம் கிடைக்காது. அவன் பிறரைப் பற்றிக் குறை கூறுவதற்கோ, அல்லது கவனிப்பதற்கோ தான் எங்கே நேரமிருக்கும்? நம்மைச் சுற்றியுள்ள இளைஞர்களில் பெரும்பாலோர் பிறரை எடையிட்டுப் பேசிக் கொண்டு திரியும் போலிப் புரட்சியாளர்களே! இவர்களை

வைத்துக் கொண்டு, இந்நாட்டில் எவ்வாறு உண்மையான புரட்சியை உருவாக்கிவிட முடியும்? முடியவே முடியாது! உண்மையான உரிமைத் தாகம் உள்ளவர்கள்தாம் புரட்சியாளர்கள். போலிப் புரட்சியாளர்கள் தாகமில்லாவிடினும் மெப்புக்கு, அல்லது வெறும் கூட்டுணர்வுக்காக, சும்மா ஒரு மிடறு இரண்டு மிடறு தண்ணீர் குடிப்பவர்களைப் போன்றவர்களே! இவ் விந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்ட மேல்தட்டு மக்கள் இத்தகையவரே! ஆனால், அத்தகையவர்கள் கூட, ஒரு தன்னுரிமைப் போராட்டத்திற்கு - ஒரு விடுதலைப் போராட்டத்திற்கு — உதவ முடியுமே தவிர, ஒரு பொருளியல் போராட்டத்திற்கு உதவி விட முடியாது.

போராட்டங்கள், அனைத்துமே புரட்சிக் கூறுகளை உள்ளடக்கி எழுந்து விடுவதாகச் சொல்ல முடியாது; தொழிலாளர் போராட்டங்கள் வேறு; ஏதோ ஒரு சில கோரிக்கைகளுக்காக ஏதோ ஒரு சில காலகட்டத்தில் எழுகின்ற போராட்டங்கள் வேறு; ஆனால், இவற்றினின்று மாறுபட்டவை உரிமைப் போராட்டங்கள்! இனி, இதனின்றும் பெரிதும் மாறுபட்டது, வளர்ச்சியுற்றது பொருளியல் போராட்டம்!

உரிமைப் போராட்டம் என்பது ஒரு நிலத்தில் யார் குடிசை போட்டுக் கொள்வது என்பதைப் போன்றது. பொருளியல் போராட்டம் என்பது, நிலத்தில் உள்ள குடிசைகளை முழுவதும் அழித்து விட்டு, அதில் ஏற்கனவே உள்ள ஒரு சில மாடி வீடுகளுக்கு இணையாகக் குடிசை வீட்டுக்காரர்களுக்கும் மாடி வீடுகள் கட்டித்தர வேண்டும் என்பதைப் போன்றது. எனவே போராட்ட அடிப்படையிலேயே பொருளியல் போராட்டம் வேறுபடுகின்றது. வேறுபடுவது மட்டுமன்று; மாறுபடவும் செய்கிறது. இனி, மாறுதல் என்பது ஒரு பகுதி மாறுதலன்று; அடிப்படையையே மாற்றுவது; விளக்கமாகச் சொன்னால் தலைகீழாக மாற்றுவது. எனவேதான் உரிமைப்போராட்டத்தையும் பொருளியல் போராட்டத்தையும் புரட்சி என்கிறோம். இ'து எல்லாப் போராட்டங்களிலும் மிகக் கடினமானது. உயிரைத் தூசாக மதித்துச் செய்ய வேண்டும், என்பதால் மட்டும் கடினமானது என்பதன்று. உயிரைப் போக்கிக் கொள்வது எளிது. உண்மையை நிலைநாட்டுகின்ற முயற்சிதான் கடினம். ஏனெனில் பொய்யே — ஏமாற்றே. கொடுமையே முழுவதுமாக, அரசாட்சியாக உள்ள நிலையில், உண்மையை நிலைநாட்டி வெற்றி காண்பது தான் மிகக்கடினமான செயல். ஏற்கனவே நலம் பெறுகிறவர்கள் அதை எவ்வாறு விட்டுத் தருவார்கள்? நம் முயற்சிகளை எல்லா நிலையிலும் அவர்கள் எளிதாகத் தடுத்து விட முடியும். அல்லது முறியடித்து விடமுடியும். அல்லது முயற்சி செய்கின்ற நம்மையே மறைமுகமாகவோ, நேரடியாகவோ, ஏதோ காரணம் காட்டியோ காட்டாமலோ அழித்து விடவும் முடியும். மற்ற போராட்டங்களுக்கோ உரிமைப் புரட்சிக்கோ கூட இத்தகைய எதிப்பாற்றல்கள்

கிடையா. எனவேதான், பொருளியல் புரட்சி செய்ய விரும்பு கிற, அல்லது செய்ய முற்பட்டிருக்கின்ற இளைஞர்கள், தாங்கள் செய்ய விரும்பும் செயலுக்காகத் தாங்கள் எத்தனைக் கொடுமை-களை அல்லது சூழல்களைச் சந்திக்க அல்லது எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்பதை நன்கு உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

இனி, பொருளியல் புரட்சியில் ஒவ்வொரு நாடும் வேறு வேறு பரிமாணங்களைக் கொண்டன. குறிப்பாக இந்நிலையில் இந்தியா வேறு; உருசியா வேறு! அதேபோல் கிழக்கு செருமனி வேறு; சீனா வேறு! எனவே, பொருளியல் புரட்சி தோன்றிய அல்லது சமநிலைக் குமுகாய அமைப்பு அரசியல் நடைபெறுகின்ற அனைத்து நாடுகளிலும் புரட்சியின் தொடக்கமும், முடிவும், விளைவும் வேறு வேறாகத்தான் இருக்கும்! இருக்கின்றன. தண்ணீர் ஒன்று தான். ஆனால் குளத்து நீர் வேறு; ஏரி நீர் வேறு; ஆற்று நீர் வேறு; கடல் நீர் வேறு அல்லவோ? ஒரு வகையில் பொருளியல் சமன்பாடும் நீர்ப்பரப்பைப் போன்றதே! ஆனால் நீர் பரவி நிற்பதற்கு முன், அங்கு எப்படிப்பட்ட சூழ்நிலையில் நிலம் இருந்தது என்பதைப் பார்க்க வேண்டும்! அந்த நிலையைத் தெரிந்துதான் நாமும் முயற்சிகளையும் விளைவுகளையும் மதிப்பிட்டுப் பார்க்க முடியும்.

உலகில் மழை பொழியும் நிலப்பகுதிகள் உள்ளன; மழை பெய்யும் பகுதிகளும் உண்டு; மழை தூறும் இடங்களும் இருக்கின்றன. இனி, மழை முகத்தையே காணாத வறண்ட பாலை நிலங்களும் இருப்பதை நாம் அறிவோம். அப்படிப்பட்ட பாலை நிலம் போன்றதே, பொருளியல் புரட்சியைப் பொறுத்தவரையில், இந்திய நாடும்! இங்கு, பொருளியல் புரட்சியென்னும் மழை பொழியவோ, பெய்யவோ, தூறவோகூட வாய்ப்புக் குறைவாகவே உள்ளது. எனவே, சிரபுஞ்சியில் பெய்யும் மழை, சகாராவிலும் பெய்யும் என்று எதிர்பார்க்கக் கூடாது. ஆனாலும் அறிவியல் வளர்ச்சி பெற்ற இக்காலத்தில் சகாராவிலும் மழையைப் பொழிய வைக்கும் முயற்சியைப் போல், மாந்த உரிமை கிளர்ச்சியுற்று, வளர்ச்சி பெற்று, மலர்ச்சியுற்று வரும் இக்காலத்தில் இந்தியாவிலும் பொருளியல் புரட்சி கை கூடும் என்றாலும், அதற்குச் செய்யப் பெறும் முயற்சிகளும் பல்வேறாகவும், செய்யும் ஆட்களும் பல வலிவினராகவும் இருத்தல் வேண்டும் என்பதைத் தான் மறந்து விடுதல் கூடாது.

இந்தியாவில் ஏற்கனவே பொருளியல் புரட்சியை உண்டாக்கி விடும் நோக்கத்துடன், கடந்த ஐம்பது அறுபது ஆண்டுகளாக எத்தனையோ வகையான தலைவர்கள், அறிஞர்கள், குமுகாய மேதைகள் அருமை பெரும் கடுமையாகவும் பேரளவிலும் பற்பல முயற்சிகளைச் செய்தனர்; செய்தும் வருகின்றனர். குறிப்பாக இங்குள்ள ஆறேழு வகையான பொதுவுடைமைக் கட்சிகள் அந்த வகையான முயற்சியிலேயே தம் அரை நூற்றாண்டுக் காலத்தைக்

கழித்திருக்கின்றன. என்றாலும் நாம் முற்ற எதிர்பார்க்கும் பொருளியல் புரட்சியின் அடிச்சுவடுகளைக் கூட அவற்றால் ஏற்படுத்தி விட முடியவில்லை. இன்னுஞ் சொன்னால் அவை அனைத்தும் இங்குள்ள முதலாளியத்திற்கு ஏதோ ஒரு வகையில் துணை போகின்ற நிலைகளைத்தாம் நாம் கண்கூடாகக் காண முடிகிறது.

சமநிலைப் பொதுவுடைமைக் குமுகாயமே தம் நோக்கம், கொள்கை என்று தம்பட்டம் அடிக்கின்ற இங்குள்ள பொதுவுடைமைக் கட்சிகள் பெரும்பாலானவற்றின் அடித்தளங்கள் பார்ப்பனீய முதலாளிய அடித்தளங்களகவே இருப்பதைப் பார்க்கலாம். இங்குள்ள பொதுவுடைமைக் கொள்கையரில் ஆயிரத்தில் ஓரிருவரைத் தவிர, பிறர்க்குச் சாதியுண்டு; மதமுண்டு; மூடநம்பிக்கைகள் உண்டு; முதலாளியத் தாக்கங்கள் உண்டு. அவர்களில் பெரும்பாலார் சிறு சிறு தொழில் முதலாளிகளாவும் நிலக்கிழார்களாகவும், சாதி, மதக் கோட்பாடுகளுக்கு அடிபணியும் பழம்பழைமைக் கருத்துடையவர்களாகவும் இருப்பதை மிகவும் வெளிப்படையாகவே உணரலாம்; ஒன்றும் ஆழமான ஆராய்ச்சி கூடத் தேவையில்லை. நிலைமை இவ்வாறு இருக்கையில் இவர்களால் எவ்வாறு இந்நாட்டில் ஒரு சரியான பொருளியல் புரட்சியை அல்லது மாற்றத்தை உருவாக்க முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இனி, இங்கிருக்கும் பொதுவுடைமையாளர்களின் நிலை ஏன் இவ்வாறு உள்ளது, ஏன் அவ்வாறு இருத்தல் வேண்டும்,— என்றால், நாம் முன்பே சொன்னது போல் அவர்கள் அனைவரும் பார்ப்பனீய —முதலாளிய அடித்தளத்தில் இருப்பவர்கள்! இன்னுஞ் சொல்வதானால் அவர்களில் பெரும்பாலோர் பார்ப்பனர்களே! அஃதாவது சகாரா பாலைநிலத்தில் சிறபுஞ்சியை எதிர்பார்ப்பவர்கள். பார்ப்பனீயத்திற்கும் பொதுவுடைமைக்கும் வட துருவத்திற்கும் தென்துருவத்திற்கும் உள்ள தொடர்பு. ஒரு வேளை பார்ப்பனீயத்திற்குள் பொதுவுடைமை மூழ்கிப் போகுமே தவிர, பொதுவுடைமைக்குள் பார்ப்பனீயம் மூழ்கிப் போகாது. எனெனில், பார்ப்பனீயத்தைப் பார்ப்பனர்களேதாம் அழிக்க முடியும். வேறு எந்தக் கோட்பாட்டாலும் எவரும் அதை அழிப்பது அவ்வளவு கடினம்.

மேலும், இங்குள்ள பொதுவுடைமைக் கட்சிகளெல்லாம் நிலத்திற்கு மேலுள்ள பரந்த மரத்தைப் போன்றவையே. அவற்றின் வேர்கள் இங்கில்லை; உருசியாவிலும், சீனாவிலும் உள்ளன. அவற்றிற்குக் கிடைக்கும் நீரும் உருசியாவின் சீனாவின் நிலத்தடி நீரே! எனவே, அவற்றை இங்கு யாரும் கட்டுப்பாடு செய்யவோ, கேள்விகள் கேட்கவோ இயலாது. எனவே, மரங்களில் படர்ந்து வளரும் புல்லுருவிகளைப் போல, இங்குள்ள பொதுவுடைமை மரங்களில் பார்ப்பனீயப் புல்லுருவி படர்ந்து கிடக்கிறது. இதனாலெல்லாம் உருசியர்களுக்கோ சீனர்களுக்கோ ஏதும் இழப்பு ஏற்பட்டுவிடப் போவதில்லை. அவர்களுக்கு எப்படியோ

மரம் எங்கிருந்தாலும் வேர் மட்டும் இங்கிருந்தால் போதும் என்பதுதான் கோட்பாடு, கொள்கை !

உலகில் இன்றைய நிலையில் மேலாளுமைப் பொதுவுடைமை நாடுகளாக உள்ள உருசியாவும் சீனாவும் இங்குள்ள பார்ப்பனர்களில் பலரைத் தங்களுக்கு உகந்தவர்களாகப் பிடித்து வைத்துள்ளன. அவர்களுக்குப் பார்ப்பனர்களாக இருந்தாலும் சரி, வேறு எந்த இனத்தவராக இருந்தாலும் சரி; தங்கள் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் ஆதரிப்பவர்களாக மட்டும் இருந்தால் போதும். மேலும் பார்ப்பன இனம் ஓர் அறிவினமாக இருப்பதாலும், உருசியர்களைப் பொறுத்தமட்டில், இந்தியப் பார்ப்பனர்களின் மூதாதையர்கள் கிழக்காசிய நாடான உருசியாவிலிருந்தே வந்தவர்களாக இருப்பதாலும், அவர்களே இங்குள்ள நாட்டினத்தவர்கள் எவரையும் விடத் தங்கள் கொள்கைக்கு முழு ஆதரவு தரக் கூடியவர்களாக இருப்பதாக அவர்கள் கருதுவதாலும், அவர்களையே தங்களுக்கு ஏற்றவர்களாகத் தேர்ந்து கொள்கின்றனர். அதுதவிர, இங்குள்ள பார்ப்பனர்களும் இரட்டைப்புனைவு போடுபவர்களாக இருப்பதாலும், தங்களுக்கும் ஏதோ ஒரு வகையில் பிழைப்பு நடக்க வேண்டும் என்பதாலும், உருசியர்களுக்கும் சீனர்களுக்கும் உகந்த வகையில் தங்களை மாற்றிக் கொள்வதுடன், அவர்கள் கொள்கைகளுக்கு முழு உள்ளுணர்வுடன் இல்லாமற் போனாலும், புறத்தளவிலேனும் ஒத்துழைப்பவர்களாக மாறி விடுகிறார்கள்.

இனி, இங்குள்ள பார்ப்பனர்களில் இன்னொரு கூறினர், இந்த நாட்டின் உள்முக அரசியலிலும் ஆளுமை பெற்றவர்களாகவும் ஆகியிருக்கின்றனர் என்பதையும் நாம் அறிவோம். அத்தகையவர்கள் இங்குள்ள முதலாளிகளுடன் நன்கு இணைந்து தொடர்பு வைத்துக் கொண்டு, இந்நாட்டில் பார்ப்பனீயமும், முதலாளியமும் அவற்றிற்கு அடித்தளமாக உள்ள சாதீயம், மதவியம், மற்றும் புராண இதிகாசங்களை உள்ளடக்கிய இந்து மத தர்மக் கோட்பாடுகளையும், வளர்கின்ற காலத்திற்கேற்ற வேறு வேறு புறமாற்றங்களைக் கொண்டாலும், உட்சிதைந்து போகாமல் கட்டிக் காத்து வருகின்றனர். எனவேதான் இந்நாட்டில், பொதுவுடைமை உணர்வு துளிர் விடுவதுபோல் ஒரு புறத்தில் தோற்றங் காட்டினாலும், மறுபுறத்தில் பார்ப்பனீய —முதலாளியக் கோட்பாடுகளும் நன்கு உறுதியுடன் வேர் விட்டுக் காலூன்றி நின்று கொண்டிருக்கின்றன.

இந்த உள்முக நிலைகளையெல்லாம், இங்குள்ள புரட்சி மனப்பான்மை கொண்ட இக்கால இளைஞர்கள் புரிந்துகொள்வதே மிக மிகக் கடினம். இவற்றை விளங்கிக் கொள்ளுகின்ற இளைஞர்களில் ஒருசிலர்தாம், இங்குள்ள தமிழின மீட்புக்கும், தேசிய இன விடுதலைக்கும், பொதுவுடைமைச் சமநிலைக் குமுகாயத்திற்கும் நம் போன்றவர்களுடன் ஒருவாறு துணைக்கு வரத் தொடங்கியுள்ளனர். அவர்களிலும் மிகப் பெரும்பாலோர்,

நாம் இங்குள்ள அடிப்படைக் கேடான நிலைகளைப் படிப்படியாக —ஆனால் உறுதியாக—மாற்றுவதற்குரிய உத்திகளான மொழி, இன, நாட்டுணர்வுகளை வளர்த்தெடுப்பதான முயற்சிகளின் உண்மை விளைவுகளை விளங்கிக் கொள்வதிலும் பின்வாங்குகின் றனர். மூவாயிரமாண்டுக் கால வரலாற்றுப் புதைகுழிகளைத் தோண்டிப் பார்த்து, இப் பழம்பெருந் தமிழினத்தின் ஒட்டு மொத்தமான மொழியியல், அரசியல், பொருளியல், கலை, பண் பாட்டியல், நாகரிக வாழ்வியல் முதலிய அனைத்தும் படிப் படியாய்ச் சிதைந்து போன வழித்தடங்களைக் கண்டு, அவற்றை மீண்டும் அதே வழியில் மீட்டெடுக்க வல்ல உய்முறை உத்தி களாக நாம் காட்டிய மொழி, இன, நாட்டுணர்வுகளைச் சட்ட-ரென விளங்கிக்கொள்வது, இம் மாந்தவியல் மூலக்கூறுகளை அறியாத எவர்க்கும் மிகக் கடினமே! ஆனால், அதுவரை நாம் இந்த முயற்சிகளில் ஓர் எள்ளின் மூக்கத்துணையும் குறைந்து போகாதவாறு, ஒரு வலித்தமான கடப்பாட்டு உழைப்பைச் செய்தே ஆக வேண்டியவர்களாக இருக்கிறோம் —இருக்க வேண்டும்— என்பதை நம்முடன் ஒத்துழைக் கின்றதாகக் கூறிக் கொள்ளுகின்றவர்கள் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

இனி, இவ்வகை முயற்சிகளை யெல்லாம் சரிவர விளங்கிக் கொள்ளா தவர்களுக்கு, இவை எளிதாகத் தோன்றும். ஆனால் செயல் அளவில் இம் முயற்சி மிக மிகக் கடினமும் கால அருமை-யும் வாய்ந்தது. விடாமுயற்சியோடும், முழு உணர்வோடும், இடையில் எத்தனை இடர்ப்பாடுகள் எவ்வெவ் வழியாக வந்தா-லும் அத்தனையையும் எதிர்த்து மேலேறும் மதுகையும், துணிவும், சூழ்ச்சிகளையும், உட்பகைகளையும் விளங்கிக் கொள்-ளும் முன்னறி திறனும், தந்நலம் கருதாமையும், ஊதியம் எதிர்பாராமையும், இழப்பும் துன்பமும் வந்து குவிந்தாலும் மன நெகிழ்ச்சியின்றிச் சுமைகளைத் தாங்கிக் கொள்ளும் வலிந்த உறுதி யும், இயற்கைத் துணையும் வந்து வாய்க்கப் பெற்ற திறனுள்ள வர்களால்தாம் இம்முயற்சி வெல்லும் தகையது. அத்தகைய உணர்வுத்தகுதியுள்ள இளைஞர்களை எங்குப் போய்க் காண்பது— தேடுவது—அடையாளம் கண்டு கொள்வது? இனி, இத்தகை யோரை உருவாக்குவது இயலவே இயலாது. பிறப்பிலேயே அன்ன தகுதியுடையவர்களாக இருப்பவர்கள் வந்து வாய்க்கின்ற வரையில், நாம் அத்தகையவர்களைத் தேடியலைவதைத் தவிர வேறு வழியில்லை.

(தொடரும்)

## அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில், மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக் கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

-அமைச்சர்.

# வெறியாட்சி அழிக!

முறையில்லை செயல்முறையில்; பண்பில்லை! பணிகளிலே
முழுமை இல்லை;
கறையில்லாத் துறைகளில்; கடமையிலை; கண்ணியமும்
காக்க வில்லை!
பொறையில்லை; பொய்மனமே பொன்மனமாய் புண்ணுக்குப்
புனுகு பூசிக்
குறையெல்லாம் மறைக்கின்ற தமிழ்நாட்டின் அரசாட்சி
கொடுமை அம்மா!

காவிரியும் வற்றியது; தமிழுணர்வும் வற்றியது;
கலங்கும் மக்கள்
தேவைகளைப் பற்றியநல் அக்கறையும் வற்றியது;
சீர்மை வற்றிக்
காவல்துறை எற்றியது; ஏழைகளின் முறையீடு
கமரிற் பாலாய்
மேவியதே! கொற்றவன் போல் கோழை அரசாட்சிசெய
வீழ்ச்சி இங்கே!

தாய்த்தமிழை மெய்யாக வளர்ப்போர்பால் பகையுணர்வே
தழைக்கச் செய்து,
பேய்த்தொழும்பு பேணுவர்போல் இந்திவெறித் தலைவர்க்குப்
பிடரி காட்டிச்,
சீர்த்திமிகும் தமிழ்க்கலைகள் தொழில்வளங்கள் வாழ்வுநெறி
தேய வைக்கும்
நாய்த்திறத்தார் குடிபெருக்கி விளம்பரஞ்செய் ஆட்சியிலே
நயன்மை ஏது?

தமிழகத்துத் தென்கோடி மீனவர்தம் வாழக்கையது
சிதைந்தால் என்ன;
அமர்மிகுந்த ஈழகத்துத் தமிழர்களும் முற்றிலுமே
அழிந்தால் என்ன;
இமைமழுங்கி விழிமழுங்கி பகுத்தறிவு தான்மழுங்கும்
குடிகள் என்றும்
தமைநம்பிச் சீரழிய தாம்செழிக்கும் அரசாட்சித்
தகைமை இங்கே!

திறம்பாட மாட்டாமல் விளம்பரப்பொய்ம் முகங்களையே
திருப்பிக் காட்டி,
இறங்காத தமிழ்மானம் இழிவடவர் இனத்தார்பால்
இறக்கி வைக்கும்
கொடுங்கோலக் கொள்ளையர்தம் கூத்தடிப்பும் வன்முறையும
நிலைக்க லாமோ?
அறம்பாட வெறியாட்சி அழியுமெனில், பாடிவிட்டேன்,
அழிந்தே போக!

வள்ளிகேள்வன்

*சிறப்பு மடல்*

# முதலமைச்சர்க்கு ஒரு மடல்!

*கீதா உதயகுமார்*

*1-10-38/2, பிரகாசம் நகர்*
*பேகம் பேட்டை*
*ஐதராபாது- 16.*
*17. 6. 1987*

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு,

வணக்கம். சென்னையிலிருந்து மூன்று கிழமைகளுக்கு முன் இங்குக் குடி பெயர்ந்துள்ள தமிழ்ப்பெண் எழுதிக்கொள்ளும் இம் மடலுக்கு இம்முறையாவது மறுமொழி கிடைக்கும் என்னும் நம்பிக்கையுள்ளது.

ஆந்திரமாநிலம் உட்பட இந்தியாவின் பிறமாநிலங்கள், (தமிழகம் தவிர) பள்ளிகளில் வைத்துள்ள மும்மொழித் திட்டத்தின்படி அந்தந்த மாநிலமொழிகள், குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்காவது காட்டாய முதல், அல்லது இரண்டாவது பாட மொழியாகப் பயில்விக்கப்படுகிறது. ஆனால், தமிழக அரசின் இருமொழித் திட்டத்தின் கீழ் மாநில மொழியான தமிழ், ஆங்கிலப் பயிற்று மொழிப் பள்ளிகளிலும், மொழிச் சிறுபான்மையினரால் நடத்தப்படும் பள்ளிகளிலும் பள்ளி வாழ்க்கையின் எந்த ஆண்டிலும் கட்டாயப் பாட மொழியாகக் கற்பிக்கப் படுவதில்லை. நடுவண் அரசுக் கல்வித் திட்டத்தின்படி நடத்தப் படும் பள்ளிகளிலும், இந்திமொழி கட்டாயப் பாடமொழியாகக் கற்பிக்கப் படுகிறதே ஒழிய, மாநில மொழியான தமிழ் எந்த நிலையிலும் கட்டாயமாக்கப் படவில்லை. இதனால் தமிழகத்தில், தமிழ் எழுதப் படிக்கத் தெரியாத இளந் தலைமுறையினரின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு கூடி வருகிறது. தாய்மொழிப் பற்று இல்லாத தமிழ்ப் பெற்றோர்களும் நடுவண் அரசு இந்தி பயில்வோருக்கு அளிக்கும் பதவி, சம்பள உயர்வுகளை மனத்தில் கொண்டு, தம் குழந்தைகள் தமிழைப் புறக்கணித்து இந்தியைப் பயில ஊக்கப் படுத்துகின்றனர். சுருங்கச் சொல்லின், தமிழக அரசு நம் பள்ளிகளில் தற் போது வைத்துள்ள இருமொழிக் கொள்கை (தமிழ் கட்டாயப் பாட மொழியாக இல்லாத) தமிழின் வீழ்ச்சிக்கும், இந்தி போன்ற பிறமொழிகளின் பேராண்மைக்கும் அடி கோலி வருகின்றது. அடிப்படையிலேயே குறையுள்ள இக்கொள்கை தமிழுக்கு நன்மை செய்யும் முறையில் மாற்றப் படாதவரை தமிழக அரசு தமிழுக்காகச் செய்யும் எந்தச் செயலும் பயனளிக்காது என்பது 'உள்ளங்கை நெல்லிக்கனி'யாக உணரப்படும். உண்மையாகும். இவ்வுண்மையை எவ்வளவு விரைவில் தமிழக அரசு உணர்ந்து செயல்படுகிறதோ அவ்வளவு விரைவில் தமிழுக்கும் உயர்வு ஏற்படும் என்பது உறுதி. உரோமாபுரியில் வாழ்பவன் உரோமனாகத்தான் வாழவேண்டும் என்றால், இந்தியன் என்றால் இந்தி தெரிந்திருக்க வேண்டும் என்றால், தாங்கள் அடிக்கடி திட்டங்களில் பேசும் 'தமிழகத்தில் வாழும் ஐந்து கோடித் தமிழர்'களுக்கும் தமிழ் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டாமா?

# செய்திகள்

**1. சென்னை அண்ணாநகர் மேற்கு வேலம்மாள் நிறைநிலை மேனிலைப் பள்ளியில், முத்தமிழ் மன்றத் தொடக்க விழா:**

சென்ற 26-6-87, காரிக்கிழமை, சென்னை, அண்ணா நகர் மேற்கு, வேலம்மாள் நிறைநிலை, மேனிலைப் பள்ளியில் முத்தமிழ் மன்றத் தொடக்க விழா, காலை 10 மணியளவில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில் கொண்டாடப் பெற்றது. நிகழ்ச்சியின் முன்னிலையாளராக, பள்ளித் தாளாளர், பொறியாளர் திரு. எம். வீ. முத்துராமலிங்கம் அவர்கள் பொறுப்பேற்றார். தலைவரையும் நிகழ்ச்சிக்கு வந்திருந்தோரையும் புலவர் திரு. மு. பாலக்கிருட்டிணன் அவர்கள் வரவேற்றார். வரவேற்புரையை அடுத்து தலைவர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், பள்ளி முத்தமிழ் மன்றத்தைத் தொடங்கி வைத்து, 'இலக்கியமும் வாழ்வும்' என்னும் தலைப்பில் அரியதோர் உரை நிகழ்த்தினார்.

பின்னர், மழலைப் பாடல், மாணவிகளின் வீணை இசை, ஆடல் நிகழ்ச்சி, மெல்லிசை முதலியன நிகழ்ந்தன. அத்துடன் பேச்சுப் போட்டியில் வென்ற மாணவர்கள் உரை நிகழ்த்தினர். அதன் பின்னர் விழாத்தலைவர் பாவலரேறு அவர்கள் போட்டியில் வென்ற மாணவ மாணவியர்க்குப் பரிசுகள் வழங்கினார். இறுதியில் தென்மொழியன்பரும், ஆதரவாளரும் ஆகிய பள்ளித் தமிழாசிரியை புலவர் திருவாட்டி. இராச. செயந்தி, இலக். இ. அவர்கள், தலைவர்களைப் பாராட்டிப் பாடிய ஒரு நன்றியுரைப் பாடலுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது. அந்நன்றிப் பாடல் வருமாறு :

திருவளையும் வசந்தத்தின் திருநாள் ஈது! எண்
    திசையெல்லாம் வாழ்த்துரைக்கும் தித்திக்கும் நாள்.!
பொருவரிய பொருளெல்லாம் பொற்புறச் சேர்ந்தே
    பாவலரேறு ஐயாவுரை பிறந்த நன்னாள் !
வரும்வரும்என் றிருந்ததமிழ்த் தேனாறு ஈது !
    வழுவிலாது வந்திங்குப் பாய்ந்த நாளாம் !
தரும்ஒருசொல் நன்றியென்றால் நிலவி ருக்கத்
    தனிமெழுகுத் திரிபோல ஆகும் தானே !

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

மறைந்த பேரறிஞர் அண்ணா தமிழகத்தில் அறிமுகப்படுத்திய தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கை மிகச் சிறந்தது. ஆனால், அது தமிழின் உயர்விற்கு உதவும் வகையில் செயல் படட்டும். இதுவே இம்மடலில் நான் பணிவுடன் தங்களுக்கு விடுக்கும் வேண்டு கோளாகும். இவண்

கீதா உதயகுமார்

மடலின் படி: மதிப்பிற்குரிய பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு அனுப்பப் பெறுகிறது.

(வேறு)

வாகாக வந்துவந்து நிற்கும் வண்டமிழ்
வளஞ்சொற்கள் ஐயாவின் பேச்சில் !
நோகாமல் இனித்தமிழர் நெஞ்சங் கள்இனி
நூபுரத்தில் ஐயாவழி நடக்கும் !
சாகாமல் முச்சங்கத் தமிழ்மேல் போர்த்த
சழக்கரின் செயல்களை முறித்துப்
பாகாகப் பாவலரே றுசெய் தொண்டு
பாரினில் வாழும் ! வளரும் !

மங்கல மனமகிழ் பொங்கிடும் நாளிதில்
மங்கையென் நெஞ்சினில் சுவையே
தங்கிடும் பாடலில் கொங்கிள மலரெனத்
தந்தனம் நன்றிகள் நூறே !
பசுமணி ஆடியில் படியொளி போல்ஐயா
பாவலரே றுபாரில் இருந்து
விசும்பினில் நீந்திடும் விழுமதி ஈர்மை
விளங்குற நீடுவா ழியவே

—புலவர். இராச. செயந்தி. இலக்.இ.

## 2. உ. த. மு. க. கருத்தரங்கம் — திருச்சி.

கடந்த 26.6.87 வெள்ளி மாலை 7 மணியளவில், திருச்சிராப்பள்ளி தேவர் மன்றத்தில், 'இன்றைய நிலையில் தமிழகமும் தமிழீழமும்' என்னும் தலைப்பில் ஒரு கருத்தரங்கம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு, உ.த.மு.க. துணைப்பொதுச் செயலாளர் திரு. தென்னவன்கோ அவர்கள் தலைமை தாங்கினர். மாவட்டப் பொருளர் திரு. குழந்தை ஈகவரசன் வரவேற்புரை நிகழ்த்தினர். தலைவரின் முன்னுரையை அடுத்து, திருவாளர்கள் பிளாட்டோ (தமிழின விடுதலைக் கழகம்,) கண்ணன் (உ.த.மு.க.), இராச மாணிக்கம் (த.வி.க.), மா. பொழிலன் (தமிழ்நாடு மக்கள் பேரவை), தென்மொழித் தொண்டர் கோவிந்தராசன், விஞேத் (தமிழீழத்தின் ஒரு குடிமகன்), புலவர் விடியல் விரும்பி (உ.த.மு.க.), செல்வஅரசு (தமிழ்நாடு மக்கள் பேரவை), வழக்கறிஞர் இராமதாசு (நெறியாளர், த.வி.க.) ஆகியோர் கருந்துரையாற்றினர். இறுதியில் உ.த.மு.க. முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனர் அவர்கள் இரு நாடுகளிலும் உள்ள தமிழர்கள் இருநாட்டு அரசுகளுக்கும் அடிமைப்பட்டுக் கிடக்கும் அவல நிலைகளை வரலாற்றுப் பின்னணியுடன் விளக்கி, ஏறத்தாழ மூன்று மணி நேரம் கருத்தாழம் மிக்சு, உரை நிகழ்த்தினர். அடர்த்த மழையிருந்தும் அரங்கு இறுதிவரை இருந்து கேட்டது. இறுதியில் திரு. செல்வமணி (சென்னை உ.த.மு.க.) நன்றியுடன் இரவு 12 மணியளவில் நிகழ்ச்சி நிறைவுற்றது.

### 3. முசிறித் தமிழ்க்கழகத் தொடக்கவிழா :

தி.பி. 20 கஉ ஆடவைத் திங்கள் கச ஆம் பக்கல் 28.6.87 ஞாயிறு காலை 11 மணியளவில் முசிறித் தமிழ்ச் சங்கத் தொடக்க விழா நடைபெற்றது. தமிழ்த்திரு. செங்கை செந்தமிழ்க்கிழார் தலைமையில் குளித்தலை பா. இளமுருகு, பொற்செல்வி, முசிறி முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் திரு. இராசமாணிக்கம், பேரா. கருவை. பழனிசாமி, தவத்திரு. குன்றக்குடி அடிகளார் ஆகியோர் உரையாற்றினர். மாலை 4 மணிக்கு, தமிழ்த்திரு. மா. பொழிலன் தலைமையில் தமிழ்ச் சங்க எதிர் காலப் பணி முறைப்பற்றி இளைஞர் கருத்தரங்கம் நடைபெற்றது. பின்னர் பேரா. முகமது கனி தலைமையில் நிகழ்ந்த வாழ்வியல் கருத்தரங்கில் புலவர் சேந்தமாங்குடியார், திருச்சி வானொலி இளசை சுந்தரம், புலவர், ஞான வேலாயுதம் பங்கேற்றனர். நிறைவு நிகழ்ச்சிக்கு த. நா. பட்டம் பெற்றோர் ஆசிரியர் கழகச் செயலர் திரு. பொன் தங்கராசு தலைமையேற்றார். பாவலர் மணமேடு குருநாதன், ந. நிசவீரப்பா, உ.த.மு.க. பொதுச் செயலர் தென்னவன்கோ உரையாற்றினர். இறுதியாக, உ.த.மு.க. முதல்வர் 'செந்தமிழ் அரிமா' பவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், தமிழ்ச் சங்கம் என்று பெயரிடுவது தவறு என்றும், தமிழ்க் கழகம் என்றே வழங்கப் பெறல் வேண்டும் எனத் தொடங்கித் தமிழ் மொழியின், தமிழினத்தின் நெடிய வரலாற்றினையும், அருமை பெருமைகளையும் எடுத்துக் கூறி, மொழியுணர்ச்சி மிகுந்த தமிழர்கள் தங்கள் மேல் திணிக்கப்பட்ட சாதி வேறுபாடுகளுக்கு நாண வேண்டுமென்றும், தமிழன் எனும் இன உணர்வு ஒன்றே வாய்க்கப் பெற வேண்டுமென்றும், தமிழன் உரிமை பெற்ற இனமாக உயரவேண்டுமென்றும், தமிழ்மொழிதான் நம்மை ஆள வேண்டும், தமிழன்தான் நாட்டை ஆள வேண்டும் என்ற எண்ணங்களை வார்த்தெடுக்க இது போன்ற தமிழ்க் கழகங்கள் செயல் பட வேண்டும் என்றும் நீண்ட நெடிவுரையாற்றினார். தொடக்கத்தில் திரு. சோதி ராமலிங்கம் வரவேற்புரையாற்றினார். திரு. குப்தா நன்றி நவில நிகழ்ச்சி நிறைவுற்றது.

—செய்தி. கரிகாலன்

### 4. அமலா பெண்கள் மேனிலைப் பள்ளி - முசிறி.

சென்ற 29.6.-87 அன்று பிற்பகல் 4 மணியளவில் முசிறி, அமலா பெண்கள் மேனிலைப் பள்ளியில் இலக்கிய மன்ற நிகழ்ச்சி நடைபெற்றது. இறை வணக்கத்திற்குப் பின், முன்னர் நடந்த நிகழ்ச்சி அறிக்கை படிக்கப் பெற்றது. நிகழ்ச்சிக்கு திரு. சோதி ராமலிங்கம் தலைமை தாங்கினார். தலைவர் முன்னுரைக்குப் பின்னர் 'இலக்கியப் பரிமாணங்கள்' என்னும் தலைப்பில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஒரு மணி நேரம் சிறப்புரையாற்றினார். தொடக்கத்தில் சிறப்புரையாளரையும் பிறரையும் வரவேற்று, பள்ளியின் முதுநிலைத் தமிழாசிரியை திருவாட்டி அ. அல்போன்சா, வரவேற்புப்பா படித்தார்; நன்றியுரைக்குப்பின்னர் மாலை 6 மணி யளவில் நிகழ்ச்சி நிறைவுற்றது.

5. திருக்குறள் கழகம், கிருட்டிணராயபுரம் தொடக்கவிழா!

திருச்சி மாவட்டம், குளித்தலை வட்டம் கிருட்டிணராய-புரத்தில் திருக்குறள் கழகத் தொடக்க விழா, தி. பி. ஆண்டு 2018, ஆடவைத் திங்கள் 15-ஆம் நாள் (29.6.87) மாலை 6 மணியளவில், கிருட்டிணராயபுரம் ஆண்கள் தொடக்கப்பள்ளியில் சீருற நடைபெற்றது.

குளித்தலை, இலாலாப் பேட்டை, மணப்பாறை, திருச்சி, கருவூர், முசிறி ஆகிய அண்டை அயலூர்களில் இருந்தும் உள்ளூ-ரிலிருந்தும் அன்பர்கள் பலரும் திரண்டு வந்து விழாவைச் சிறப்பித்தனர்.

நெடுநாளைய தென்மொழி அன்பரும், கருவூர் வட்ட உ.த.மு.க செயலரும் தனித்தமிழ்ப் பாவலருமான கடவூர் மணி மாறன் அவர்கள் விழாவுக்கு வருகை தந்தோரை வரவேற்று உரை நிகழ்த்தினர்.

குளித்தலை தமிழ்க் கா.சு. நினைவு இலக்கியக் குழுவின் நிறுவனர் திரு மிகு. தமிழ்ச்சுடர், மீ.சு. இளமுருகுபொற்செல்வி அவர்கள் தலைமை ஏற்றார். மருத்துவர். மதிவாணன் அவர்கள் திருவள்ளுவர் படத்தைத் திறந்து வைத்தார்.

பின்னர் நடைபெற்ற கருத்தரங்கில் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலர் திரு. தென்னவன்கோ, முசிறி கலைக் கல்லூரி, தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர். கருவை. பழனிச்சாமி, நன்னியூர். நாவரசன், புலவர். குறளன்பன் பாவலர் கா. நா. அரங்கராசன் ஆகியோர் பங்கேற்றனர்.

அதனை யொட்டி 'திருவள்ளுவர் மிகுதியும் வலியுறுத்துவது அறமே! பொருளே! இன்பமே!, என்ற தலைப்பில் குருவிக்-கரம்பை அரசு மேல் நிலைப்பள்ளி தலைமையாசிரியர் திரு. து. வெள்ளமுத்து, க. மு. கல். மு. அவர்கள் தலைமையில் பட்டிமன்றம் நடைபெற்றது.

புலவர்கள் கன்னல், தமிழ்மணி, எழில்வாணன், ப.கணேசன், பொன்னம்பலனார், காரை. சீ. இராமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு மூன்று அணிகளின் சார்பாக வழக்காடினர்.

விழா நிறைவு நிகழ்ச்சியாக உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வரும், தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்களின் ஆசிரியருமான தனித்தமிழ் அரிமா, பாவலரேறு, பெருஞ்சித்திரனார் அவர்கள் திருக்குறள் கழகத்தைத் தொடங்கி வைத்து அறிவும் செறிவும் சான்ற சீரிய பேருரையாற்றி அவை-யோர்க்கு சிந்தனைத் தெளிவையும் கருத்து விளக்கத்தையும் வழங்கினார்கள். திரு. மு. மலையாளன் அவர்கள் நன்றி நவில விழா இனிதே நிறைவுபெற்றது.

—செய்தி : கடவூர். மணிமாறன், க.மு

# வாழ்ந்து கெடுகிறோம்!

## பறம்பை அறிவன்

''எந்த அமைப்பிலும் சில தீவிரவாதிகள் இருக்கத் தான் செய்வார்கள். அவர்கள் சமரசத் தீர்வுக்குத் தடையாகவே இருப்பார்கள். நிதான புத்தி உள்ளவர்கள் தீவிரவாதிகளின் கோரிக்கைகளுக்கும் செவி சாய்க்காமல் மக்கள் நலனையும் தேசிய நலனையுமே பிரதானமாகக் கருதி, பேச்சு நடத்தி நல்ல தீர்வு காணவேண்டும். அதுதான் அனைவருக்கும் நன்மை உண்டாக்கும்''.

தினமணி-23.9.87.

''டார்சிலிங்கில் மீண்டும் கிளர்ச்சி''

மேற்கோள் 'தினமணி' ஆசிரியவுரையில் உள்ளது. மிகச் சிக்கலான நடைமுறை மீது சொல்லப்பட்ட கருத்து. 'தினமணி, யின் மெய்யியல் —(தத்துவம்—) பற்றி அறிந்தவர்கள் உண்டு. ஆனாலும், ஒரு 'நடைமுறை' யிலிருந்து எடுக்கப் பெற்ற முடிவு, ஒரு கருத்து வலிவானது. ஆனாலும், ஒரு சார்பானது. இச் சார்பு பற்றியும் நம் சார்பு பற்றியும் ஆராய்வது ஒரு பா 'ல' இருக் கட்டும். கருதுகோளின் மெய்யியல் பற்றி ஓர் எளியவன் என்ற முறையில் நானும் ஆராய்ந்து கூறுகின்றேன். எண்ணி முடிவு. தேடுங்கள் !

'தீவிரவாதிகள்' எந்த அமைப்பிலும் இருப்பார்கள்; சரி. ஆனால், அமைப்பு 'தீவிர அமைப்புத்தான்' என்பது, அதன் கொள்கை இறுக்கத்தைக் கொண்டே முடிவு செய்யப்படும் !

ஓர் அமைப்பு, தன் கொள்கைக்காக நிற்பதில் உறுதி—தீவிரம்—கொண்டிருப்பதைத் 'தவறு' என்றே 'தினமணி' போலப் பலரும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இக் கொள்கையாளரைப் 'புறக்கணித்தல் வேண்டும்' என்று ஓர் அமைப்பின் தலைமைக்குக் கருத்துக் கூறுவது எவ்வளவு பெரிய கெட்டிக்காரத் தன்மை என நாம் நினைத்துப் பார்த்திடல் நல்லது ! ஓர் எதிரி, தனக்குத் தோதான கருத்தையே தன் எதிரிக்குக் கூறுவான் என்பது யாருக்கும் தெரிந்த உண்மையே யாகும் !

ஒரு தீர்வை உடன்பாட்டில் பெறுதல் இயலும். ஆனால், தீர்வு வலியவர்க்கே கிடைக்கும். எளியவர்க்குத் தீமையே நேரும் என்பதை உடன்பாடு — சமநிலை — பற்றிப் பேசுபவர்கள் தெரியாமல் கூறுவதில்லை !!

'விடுதலைக் கொள்கை' யை விட்டு விட்டு உடன்பாடு—சமநிலை—என்ன வேண்டிக் கிடக்கிறது ? சித்திரம் பெறக் கண்ணைக் காவு தரவேண்டும் என்பது 'தினமணி' கருத்தன்று ! 'தன் வாழ்வை' எது செய்தும் சாய்காலாக்கிக் கொள்வதே தினமணியின் கொள்கையாக உள்ளது !

தீவிரம், கொள்கையற்ற முடிவுக்குத் தடையாக இருப்பது தெரிந்தும், அதனைக் 'காந்தியம்' பேசிக் கரைக்க நினைக்கிறது !

அமைதிக் கொள்கை (இதைத் தினமணி 'நிதானபுத்தி' என்கிறது.) எண்ணிச் செயல்படும் அறிவுடையவர்கள், 'கொள்கை'-யை நிலை நாட்டும் உறுதிக்காகவே இருப்பார்கள். அவர்கள் காட்டும் 'எண்ணித் துணியும்' செயல், கொள்கை பேணுதல் வேண்டியே என்பதை ஏனோ, 'தினமணி' திரையிடப்பார்க்கின்றது

கொள்கையுறுதியாளர் கூற்றுக்குச் செவிசாய்க்காமல் ஓர் அமைப்பு இயங்குதல் இயலாது. கொள்கைத் தீவிரமே ஓர் அமைப்பின் இயங்கு திறன் ஆகும் அன்றோ !

'மக்கள் நலன்', 'தேசநலன்' என்று 'தினமணி' பேசுவது போலிமையே ஆகும் !

பிசிரின்றி வெட்டொன்று துண்டிரண்டாகச் சரியான நடைமுறைக்கு எதிரான மக்கள் நலன், தேசநலன் என ஒன்றிருக்க முடியுமா ?

'பேச்சு' — 'நடைமுறை' யின்றி வெற்றி பெறுவதில்லை. 'அனைவருக்கும் நன்மை' 'எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டுவது' எல்லாம், வகுப்பு நோக்கில் ஏமாற்றுகளே ஆகும் !

ஓரின எழுச்சியை — நேர்மையை — 'உடன்பாடு', 'பேச்சுரை' என நீட்டித்து ஊழல்படுத்துவது, சிதைப்பது முதலாளியக் கொள்கை. அதில் 'தினமணி' வழுவாதிருப்பது ஒன்றும் வியப்பில்லை. நாம்தாம் தமிழர் என்று... வீணே வாழ்ந்து கெடுகிறோம் :-

இல்லையா ? எண்ணிடுவீர் !

---

(4-ஆம் அட்டைப் படத் தொடர்ச்சி)

சட்ட மன்றம் தீர்மானம் நிறைவேற்றிய போதும் இந்த மக்கள் நாயகப் பாதுகாவலர்கள், தாளிகை யாளர்கள் எல்லாம் வாய் மூடிகளாகக் கிடந்தது ஏனோ தெரியவில்லை. இன்று இவர்கள் மக்கள் நாயகம் காக்க ஊசி போடுவதும், மாத்திரை விழுங்குவதும், தாளிகை ''அறம்'' காப்பாற்ற அன்று; பார்ப்-னீய ஒற்றுமையே! இது புரியாது '' ந ம் ம ா ள் '' இதழ்கள் கூடச்சேர்ந்து அழுவது தமது பார்ப்பன அடிமையைக் காட்டிக் கொள்ளவே தவிற வேறில்லை. ஏதோ சட்டமன்றத்தில் புதிதாகத் தவறு நிகழ்ந்து விட்டது போல் குதிக்கிறார்களே, இவர்களை இத்தமிழினம் என்றுதான் இனங்காணப் போகிறதோ தெரியவில்லை. பணக்கார வணக்கம் வாழ்க! செய்தித் தாள்கள் ஒற்றுமை ஓங்குக! தங்கள் உண்மையுள்ள,

—க. கதிர்குன்றன். திருச்சி-1

---

பொய் சாகத்தான் சாகும்; புரட்டு அழியத்தான் அழியும்!

# கொய்யாக்கனி

நாடக ஆக்கம் : அதியமான்

(பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் பாவியம்.)

காட்சி — உச

உறுப்பினர்: 1. கிழவர் 2. சிங்கன். இடம்: கிழவர் வீடு.

சிங்: வெளியூரிலிருந்து, திரும்பிவந்து செல்வரின் வீட்டில் அக்காளைத் தேடினேன். அக்காளையும் அவளுடைய செல்வத்தையும் காணவில்லை. செல்வரிடமும் அவ்வூரில் உள்ளவர்களிடமும் கேட்டுத் தேடி அலைந்தேன். எங்கும் அவளைக் காணவில்லை. நெஞ்சு உழன்றேன். படையில் சேர்ந்து போய்விட்டேன். இருபது ஆண்டுகள் அங்கிருந்துவிட்டு வந்தேன். மக்களுக்காக உழைக்கப் பொதுத்தொண்டில் ஈடுபட்டு வாழுகிறேன். நான் இங்கு வந்து ஒரு திங்களாயிற்று.

கிழ: சிங்கா என் பக்கத்திற்கு வா.

சிங்: எதற்கு?

கிழ: நீ, வாயேன்.

சிங்: (வருகிறான்)

கிழ: (அவன் உடல் உறுப்புகளை உற்றுப்பார்க்கிறார்)

சிங்: எதற்காக இப்படிப் பார்க்கிறீர்கள்? எனக்கொன்றும் புரிய வில்லையே!

கிழ: அப்பா! நீ தானடா என் மகன்!

சிங்: ஐயோ! அப்பா! (தந்தையை அணைத்துக் கொள்கிறான்) தந்தையே அக்காள் எங்கே? அவள்பெற்ற முத்து எங்கே? தெரியுமா, அவளைப்பற்றி எதுவும்...

கிழ: சொல்லுகிறேன், மகனே. நீயும் அக்காளும் ஓரிரு நாள்களில் திரும்புவதாய்ச் சொல்லிச் சென்றபின் நானும் உன்தாயும், உங்கள் வரவை எதிர் பார்த்து இருந்தோம். நீயும் அக்காளும் வரவே இல்லை. ஒருநாள் அக்காள் மட்டும் தனியாக அவள் செல்வத்துடன் வந்துசேர்ந்தாள். ஆனால் அவளும் நீண்ட நாள்கள் இருக்கவில்லை.

தீவினையின் செயல்கள் கொடுமையாயின. ஏழைகளைக் கண்டு இரங்குவோரில்லை. வரிப்புறத்து மக்கள் கஞ்சி கஞ்சி என்று அலைந்தனர். எவரும் தம் இனம் நிலை தவறியதைப் பற்றிக் கவலைப்படவில்லை. எங்களிடம் மிச்சம் மீதி இருப்பதைப் பறிப்பதற்கே செல்வர்கள் மோப்பம் பிடித்து அலைந்தனர். ஒன்றைக் கொடுத்துப் பத்தைப் பறித்தனர். இயற்கையாக வந்த பஞ்சத்தைக்கூடுதலாக்கினர். பணத்தால் தான் வாழமுடியும் என்று எண்ணிச் செல்வம் சேர்க்க இது-தான் வேளையென்று ஏழைகளின் குடிசைகளைத் தங்களுக்குச்

சொந்தமாக்கிக் கொண்டனர். இக்கொடுமைகளை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த மேகம் இடிஇடித்து மழை பெய்தது என்றுதான் சொல்லவேண்டும். எங்கும் வெள்ளக்காடு. கால்வாய்கள் பெருக்கத்தைக் கண்டு களிக்க எல்லாரும் ஓடினர். நானும் சென்றேன். ஐயோ மகனே! என்ன சொல்வேன். அக்கால் தண்ணீரில் ஒரு பிணம் மிதந்து வந்தது. ஒருவன் பாய்ந்தான்; பிணத்தை எடுத்து வெளியே போட்டான். மகனே நான் போய்ப்பார்த்தேன். ஐயோ, என் ஒரேமகள். உன் அக்காளின் உடல் அது! கத்தினேன்!

சிங்: (தந்தையைக் கட்டிப்பிடித்து) அப்பா! வரிப்புறத்துப் பஞ்சம் நம் குடும்பத்தைத்தான் சிதற அடித்து விட்டது. அந்தச் செல்வன்தான் அக்காளைக் கெடுத்திருப்பான். கற்பிழந்து மானம் போனமையால் உயிரை விட்டுவிட்டாள். ஆனால் அம்மா என்ன ஆனாள்?

கிழ: உன் அக்காளின் இழப்பைத்தாங்க முடியாமல் அவள் போன இடமே, போய்ச் சேர்ந்தாள். அதன்பின் இந்தஊர் வந்து சேர்ந்தேன்.

சிங்: அம்மாவும் போய்விட்டாளா? சரி அக்காள் பெற்ற செல்வம்?

கிழ: அவள் தான் மிச்சம். அவள்தான் வள்ளி! உன் உள்ளத்தைக் கவர்ந்த பூக்காரி. நல்லவேளை நான் இறப்பதற்குள் வந்து சேர்ந்தாய். நாம் காக்கவேண்டிய சொத்து அவளே! காத்துக் கொள்வாய்!

சிங்: அப்பா, வள்ளி எங்கே?

கிழ: எங்குச் சென்றாள் என்றே தெரியவில்லை? வேங்கை போல அலையும் கருப்பனனிடம் அகப்பட்டாளோ என்னவோ? அச்சமாக இருக்கிறது.

சிங்: துன்பத் தூறல் ஒருவகையாக நின்றாலும், என் இன்பத் தேன் எங்கிருக்கிறாளோ? தெரியவில்லையே? நீங்கள் இருங்கள், நான் சென்று வள்ளியைத் தேடிக் கொண்டு வருகிறேன் (போய்விடுகிறான்.)

கிழ: (அவன் செல்வதையே பார்த்திருந்து விட்டுப் பின் ஒரு பெருமூச்சுடன்) அப்பா! ஒருவாறு கவலை விட்டது. இனி அவன் செல்வத்தை அவனே காத்துக்கொள்வான். (பாயில் சாய்ந்து உறங்கிவிட்டார்.)

## காட்சி—25

உறுப்பினர்கள்: (1) மருக்கொழுந்து: (2) வள்ளி: (3) கருப்பனன் (4) பெரியவர்-1 (5) இளைஞர் இருவர்.

இடங்கள்: (1) சாலை: (2) கருப்பனன் வீடு.

(வள்ளியும் மருக்கொழுந்தும் சாலைவழி நடந்து செல்லு கின்றனர்)

வள்: என்ன? மருக்கொழுந்து நெடும்வழி நடந்து கொண்டே இருக்கிறோமே?

மரு-கொழு: வருந்தாதே. (அண்மையில் தெரியும் ஒரு வீட்டைச் சுட்டிக்காட்டி) வள்ளி! அதோ தெரிகிறதே ஒரு வீடு; அதில்தான் உன் உயிர்க்காதலன் தங்கி இருக்கிறார். சிறிது நட; இதோ வந்துவிட்டோம்.

வள்: சரி; சரி நட, நீ ஒரு பெண்மான்; நானொரு பொன்மான்; உன்னை நம்பி உன்பின்னாலே வருகிறேன்.

மரு-கொழு: ஐயங் கொண்டு அச்சப்படாதே (வீட்டின் கதவைத்தள்ளி) இந்த வீட்டிற்குள் தான் சிங்கன் இருக்கிறார். போ. (உள்ளே தள்ளிவிட்டு ஓடிவிடுகிறாள்.)

கருப்: (ஓங்கிச் சிரித்து) வா; வா. நான் நினைத்தது தவறாது; தவறியது தொலையாது. சேலை கட்டிய பெண்களுக்கு நான்-தான் இந்த ஊரில் முதல்வன். அது தெரியாமலிருக்கிறாய். உனக்கு எது வேண்டுமானாலும் - அ'து இவ்வுலகில் எங்கிருந் தாலும் கொணர்வேன். வா; வா; பக்கத்திற்கு வா; ஏன் விலகி நிற்கிறாய்?

வள்: மீனை மீன் உண்பது போல ஒருபெண்ணே ஒருபெண்ணைக் காட்டிக் கொடுத்து விட்டாள். மருக்கொழுந்து ஒரு கோடரிக் காம்பு.

கருப்: என்ன!? மருக்கொழுந்தா உன்னை இங்கு கொண்டு வந்தது? அவளுக்கு நன்றி. யாருக்கு என்ன உதவி செய்ய வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டவள்; ஏனம் கண்டு ஈத்து உவப்பவள். அவளெங்கே?

வள்: எந்தமிழ்ப் பெண்ணுக்கு இரண்டகம் செய்து விட்டாளே. என்னைக் குழியில் விழுந்த யானையைப்போல, திண்டாட வைத்து விட்டாளே!

கருப்: அடாடாடா! என்னவெல்லாம் பட படவென்று பேசு கிறாய். அவள் நல்லவள்.

வள்: அவளும் உன்னால் கற்பழிக்கப்பட்டவள் என்று சொன்ன தால், அவளின் சூழ்ச்சியில் விழுந்து விட்டேன்.

கருப்: ஆமாம். அவள் பெற்ற இன்பத்தை நீயும் அடைய வேண்டும் என்பதைச் செய்திருக்கிறாள். நல்லதுதானே.

வள்: புலிவாயில் என்னைத்தள்ளிய அவள் புன்மதி கொண்டவள். வஞ்சகச் செயல்புரியும் தூண்டில் முள், அந்த மருக் கொழுந்து.

கருப்: அவளை நீ எப்படியும் வைத்துக் கொள்; உன்னை எனக்கு நல்ல விருந்தாக்கினாள்.

வள்: முறைகெட்டவனே! நீ நினைத்தபடி என்னை நீ பழுதாக்கி விட முடியாது. பாறையை உடைத்து விடலாம். என் கற்பை உடைக்க முடியாது. நீ நினைப்பது நாய்க்குக் கிடைத்த தேங்காய்; தேங்காயை நாய் உருட்ட முடியுமே தவிர உண்ண முடியாது.

கருப்: நீ கிணற்றுத்தவளை. உன் குதிப்பெல்லாம் கிணற்றுக் குள்ளேதான் நடக்கும். கிணற்றைத் தாண்ட முடியாது. வேண்டுமானால் முங்கிக் குளிக்கலாம். உன் வாய்ப் பேச் செல்லாம் வீண் பேச்சு.

வள்: உன் கெட்ட செயல்கள் எத்தனை நாட்களுக்கு நடக்கும்? வில்லம்பு பட்ட பறவை செத்துவிழும். நீ என் பிணத்தைத் தான் தழுவ முடியும் அதற்கு உணர்வும் இருக்காது உணர்ச் சியும் இருக்காது.

கருப்: என்ன வள்ளி, நாம் இரண்டுபேரும் பட்டிமன்றம் நடத்துகிறோமா? ஏதேதோ பேசுகிறாய்? நீ பேசும் தீமொழி தீஞ்சுவைதரும் கற்கண்டு. வள்ளி, உன் செவ்விதழினில் ஊறும் நீர் தேன்சுவை; அதைச் சுவைக்கத் துடிக்கிறேன். நீ தரும் தொல்லைகள் யாவும் காமக் குறும்பாய் என் உடலில் பாயும் மின்சாரம். பலநாள்கள் உன்னை அடைய எண்ணி எண்ணி ஏமாறிக் கழிந்தன. உன்னை அணைத்தால் பிழைப் பேன்; அல்லது வெறிகொண்டலைந்து மடிவேன்.

வள்: உன்னோடு பிறந்த பெண்கள் ஒருவனை நினைத்து அவனோடு வாழ்கிறார்களா? அல்லது பலரைக்கூடிப் பண்பை இழந் தனரா? பித்தனே நான் ஒருவனுக்கு உரிமை யானேன். அவரோடுதான் வாழமுடியும். நீ எச்சிலை நாடும் நாயாகாதே.

கருப்: எச்சிலையும் நாய் விரும்புவதாலேயே உண்டு மகிழ்கிறது. நான் உன்னை எச்சிலாகக் கருதவில்லை; என்றாலும் அது என் விருப்பம்.

வள்: வன் உள்ளத்தவனே; பல பெண்களைக் கூடும் சின்னவன் நீ. என்உள்ளத்தில் எழுந்த உண்மை அன்பு ஒருவனைத் தான் தழுவும். அதைப் பகுத்தளிக்க இயலாது. பெண்ணின் உண்மையன்பு அதுவே. களவிற்கு ஒருவன் என்ற உட் பொருள் புரியாமல் அலையாதே. அறிவிலியின் கையில் அகப்பட்ட அறிவு நூல் நான். உனக்குநான் பயன்பட மாட்டேன்.

கருப்: என் அருமை இன்சொற்கிளியே. இது போன்ற அறி வுரைகளைக் கூறவே, இனிவரும் நாள்களில் உன்னோடு வாழ விரும்பி விட்டேன். தீஞ்சுவைத் தேனே! என்னை அண்டி நெருங்கிவா. உன் உணர்ச்சிச் சூட்டை எனக்கூட்டு. பிதற் றியது போதும். இனி என்னால் பொறுத்திருக்க முடியாது. அணைத்துக் கொள்ள வா. (கையால் பிடித்திழுக்கிறான்).

வள்: சீ, விடு கையை; (திமிறி விடுகிருள்) என்னை ஒருவருக்கு உரிமையாக்கியபின் உன்வெறிக்கு ஆளாக மாட்டேன்.

கருப்: உன் உரிமையாளனைக், கண்ணையனைக் கொண்டு கொன்றுவிட்டு, பின் கண்ணையனையும் தொலேத்து விட்டு உன்னை யடைய எண்ணினேன். பிந்திப் போகவேண்டியவன் முந்திவிட்டான். முந்திப்போக வேண்டிய சிங்கன் பிந்திப் போய்ச்சேர்வான். அவ்வளவுதான். எல்லாம் என்கையில்-தான். நான் என்ன நினைத்தாலும் நடக்கும். இனி சிங்கன் உன்னை உரிமை கொண்டாட முடியாது. (சேலையைப் பற்றி இழுத்து) திமிருதே.

வள்: (சேலையைக் கூறையின் கழியில் கட்டித் தற்கொலை முயற்சி செய்கிருள்) கொழுத்த கொடுமை விலங்கே; என் பிணத்தைத் தான் நீ பார்க்கமுடியும்.

கருப்: (தடுத்து) என் உணர்வே; நீ சாகலாமா?
(கற்பழிக்க முயலுகிருன்)
(வீட்டுக் கதவு தட்டப் படுகிறது.)

(வீட்டுக்கு வெளியே ஊர்ப்பெரியவர்கள், இளைஞர்கள், மருக்கொழுந்து ஆகியோர் நின்று வீட்டின் கதவைத் தட்டு கிருர்கள்)

பெரி-1 ஏய்! கதவைத்திற!

கருப்: (வள்ளியை விட்டுவிட்டு) ஏன்? யார் நீ?

வள்: (கதவைத் திறக்கிருள்)

(ஊ-பெரி., இளைஞர், மரு-கொழு. அனைவரும் வீட்டிற்குள் நுழைகிருர்கள்)

வள்: நல்லவேளை; சிறிது நேரம் கழிந்திருந்தால், இந்தக் கரியன் என்னைக் கற்பிழக்கச் செய்திருப்பான், நானும் பிணமாயிருப்பேன் (மருக்கொழுந்தைப் பார்த்து) ஆ! மருக்கொழுந்தே! உன் திட்டந்தானு இதுவும்?

பெரி-1: இந்த நாயைக் கட்டுங்கள்!

இளை-இருவர்: (கருப்பனைப் பிடித்துக் கட்டுகிருர்கள்.) ஏய்! திமிருதே; உதைவாங்கப் போகிருய்.

பெரி-1: ஆமாம் திமிருதே முதுகுபுண்ணுகும். பலநாள் கள்ளன் ஒரு நாளைக்கு அகப்படுவான் என்பது உண்மை. நாயே; உன் கெட்ட செயல்கள் நிலேக்காது. தெரியுமா?

கருப்: (கண்சிவக்கப் பல்லேக் கடித்து) மருக்கொழுந்து! உன் திட்டமா இது? உன் உயிர் இப்போதே ஊசலாடிக் கொண்டிருக்கிறது என்பதை நினைத்துக்கொள். உன்னை உயிரோடு விட்டுவைத்து என்னைக் கெடுத்துக் கொண்டேன். நீ என்னைத் தொலேத்துக்கட்ட செயலாற்றி விட்டாய். உன் உயிருக்கும் உலே வைத்துக்கொண்டாய்.

# இந்தியத் தேசிய இனங்களின் விடுதலை எழுச்சிகள் !

-- தென்மொழி கரிகாலன்.

1946 சூன் திங்கள் நேருவின் தலைமையில் நம் இடைக்கால அரசு ஏற்பட்டது. 1946 சூன் திங்கள் 16ஆம் நாள் பிரிட்டீசு இந்திய ஆளுநர் கொடுத்த கட்டளையின் பேரில் மாநில பிரிட்டிசு ஆளுநர்களே இந்தியாவுக்கான அமைப்பை உரு வாக்கும் பணிகளைத் தொடங்கினார்கள். 1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டப் பிரிவு 62 (2)இல் கொடுக்கப்பட்ட அதிகாரத்தின்படி, அன்றைய மாநிலச் சட்டமன்றங்கள் அரசியல் பேரவைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்குமாறு பணிக்கப் பட்டார்கள்.

1935 ஆம் ஆண்டுத் தேர்தலின் போது 70 விழுக்காடு உழைப்பவர்களின் ஒப்போலையுரிமை மறுக்கப்பட்டு அன்றைய வெள்ளையரசுக்கு விருப்பமானவர்களுக்கே அவ்வுரிமை வழங்கப் பட்டது. அஃதாவது பெரும் நிலம் படைத்தவர்கள், தொழில் முதலாளிகள், வெள்ளையர்களிடம் கையேந்தித் தங்களை வளப் படுத்திக் கொண்டவர்கள், மெத்தப் படித்தவர், நிலக்கிழார்கள் ஆகியவர்களால்தாம் சட்ட மன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

இந்திய ஆட்சி அரசமைப்புச் சட்டக் குழுவுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். நேரு, சின்ஹா, அம்பேத்கர், போன்ற தலைவர்கள் இப்பேரவைக்கு அமர்த்தப்பட்டவர்கள். இந்த அரசியல் அமைப்பு அவையின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 880 பேர்கள். இந்த அரசியல் அமைப்பு அவையின் தலைவர் இந்தி பேசும் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த இராசேந்திர பிரசாத் அவர்கள். இந்த அரசியல் அமைப்பு அவை உறுப்பினர்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் மிகச் சிலரே. அஃதாவது 30 பேர்கள் கூட இல்லை. இவர்களில் பெரும்பான்மையர் பேராயக்

---

*(முன் பக்கத் தொடர்ச்சி)*

பெரி-1: ஏய்! விலங்கே பேசாதே. உடம்பு சல்லடையாகும்!

இளை: (கருப்பனை அவன் கைகளைக்கட்டி வெளியில் இழுத்துக் கொண்டு வருகிறார்கள்)

பெரி-1: இந்தக் கள்ளக் கழுதையை இழுத்துச் செல்லுங்கள். (மருக்கொழுந்தையும் வள்ளியையும் பார்த்து) மருக் கொழுந்து நீயும் வள்ளியும் நாளை வரவேண்டும்; நினைவிருக் கட்டும். (கருப்பனை இழுத்துக் கொண்டு போகிறார்கள்)

-(தொடரும்)

கட்சியை சேர்ந்தவர்களே ஆகும். அத்தனைப் பேர்களும், வட நாட்டு விரும்பிகள். இவர்களிடம் தமிழினப் பற்று கடுகளவு கூட இல்லை. இவர்கள் நோக்கம், எண்ணம், அனைத்தும் இந்தியத் தேசியம் என்கிற கண்ணோட்டத்திலேயே சிந்தித்தார்கள். செயல் பட்டார்கள். தமிழ் மொழி, இனம், இவர்களுக்கு எட்டிக் காய்களாகக் கசந்தன. தன் தாயை அம்மா என்று அழைப் பதை விடத் தன்னைப் பெருதவளை மாதாஜி என்று அழைப்பதில் மகிழ்ச்சி கொண்டவர்கள்.

அரசியல் அமைப்பு அவைக்கான 880 உறுப்பினர்களில் 292 பேர்கள் முசுலீம்கள், சீக்கியர்கள், பிற இனத்தவர்கள், அன்றைய குறுநில மன்னர்களால் 93 பேர்கள் அமர்த்தப் பட்டார்கள்; மீதி உறுப்பினர்கள் அன்றைய வெள்ளையரசுக்கு மிகுதியாக வரி கட்டியவர்கள், தொழில் தலைவர்கள், பெரும் பணக்காரர்கள், மேல்நாட்டுக் கல்வி பயின்று வெள்ளையர் கலை, பண்பாட்டு வெறி கொண்ட அடிமைகள் இவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே, இன்றைய இந்திய ஆட்சித் துறை சட்டமைப்புகளை உருவாக்கியவர்கள்! மிக எளிய ஏழைத்


## தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்
## புதிய கட்டண விளக்கங்கள்

| | தனியிதழ் | அரையாண்டுக் கட்டணம் | ஆண்டுக் கட்டணம் | வாணாள் கட்டணம் |
|---|---|---|---|---|
| தென்மொழி :— | | | | |
| உள்நாடு : | 1-75 | 10-00 | 20-00 | 300-00 |
| வெளிநாடு : | | | | |
| வான் வழி : | 9-00 | 60-00 | 120-00 | 2000-00 |
| கப்பல் வழி : | 6-00 | 40-00 | 80-00 | 1300-00 |
| தமிழ்ச்சிட்டு :— | | | | |
| உள்நாடு : | 0-75 | — | 9-00 | 150-00 |
| வெளிநாடு : | | | | |
| வான் வழி : | 6-00 | — | 75-00 | 1250-00 |
| கப்பல் வழி : | 4-00 | — | 50-00 | 900-00 |
| தமிழ்நிலம்:— | | | | |
| உள்நாடு : | 0-85 | 22-00 | 44-00 | 750-00 |
| வெளிநாடு : | | | | |
| வான் வழி : | 6-00 | 160-00 | 320-00 | 5000-00 |
| கப்பல் வழி : | 4-00 | 110-00 | 220-00 | 3600-00 |

தொடர்பு முகவரி : 5, அருணாசலத் தெரு, சென்னை—600005.
தொலைபேசி எண் : 847829

தமிழ் உழவர், ஏழைத் தமிழ்த்தொழிலாளி இவர்கள் இப் பெரும் பணியில் பங்குபெற வாய்ப்பின்றி மறுக்கப்பட்டார்கள். சிற்றூர்களிலும் பேரூர்களிலும் வாழும் உழவர்களுக்கு இந்த அரசுச் சட்டமைப்பினால் தங்கள் குமுகாயத்துக்குத் தங்கள் தனி வாழ்வியலுக்கு எத்தனைப் புன்மைகள் ஏற்படும், தீமைகள் ஏற்படும் என்று தெரியாது. இந்திய ஆட்சித் துறைச் சட்ட அமைப்பின் உருவாக்கத்தால் தங்களின் மேலான தமிழினம் நிலையான இந்திய ஆட்சிக்கு அடிமைப்படுத்தப்பட்டு விட்டது என்பது தெரியாது.

அன்றைய தமிழகப் பேராயக் கட்சிக்காரர்கள், இனத்தின் அனைத்து உரிமைகளையும், வடநாட்டு இந்திய ஆட்சிக்கு அடகு வைத்து விட்டார்கள். வடநாட்டானுக்குத் தமிழினத்தைக் கொத்தடிமைகளாக ஆக்கிவிட்டார்கள் என்று அன்றைய தமிழ்க் குமுகாயத்தினருக்குத் தெரியாது. அவர்கள் அதனைத் தெரிந்து சொள்ளவும் விரும்பவில்லை. அத்தகைய மயக்கம் பேராயக் கட்சியின் மீது கொண்டு இருந்த தாக்கமே இன்று வரை தமிழினம் விடுதலை பெற முடியமால் இருக்கக் காரணம்.

இந்திய அரசமைப்பில், ஓர் ஒப்போலை வேறுபாட்டில், இந்திதான் இந்தியாவின் ஆட்சி மொழி என்கிற அரசமைப்புச் சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப் பட்டுவிட்டது.

இந்திய அரசமைப்புச் சட்டம், 1950 சனவரி 26ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்தது. இந்த அரசியல் சட்டத்தால் தமிழினம் தலைத்தூக்க முடியாமல் அமுக்கப்பட்டுவிட்டது.

தமிழர்கள் இந்தி வல்லாண்மையை எதிர்க்கும் நோக்கம் கொண்டு அரசியல் சட்டம் 17ஆம் பிரிவை மட்டும் தீ வைத்துக் கொளுத்தி எரிப்பதால் நாம் இழந்த உரிமைகளைப் பெற்றுவிடப் போவதில்லை. ஐந்து கோடித் தமிழ் மக்களும்,ஒட்டு மொத்தமாக இந்திய அரசியல் சட்டத்தை உடைத்தெறிந்து தம் இனத்தை மீட்சி பெற்றுத் தாய்த் தமிழ்நாட்டுத் தமிழ் மக்களுடன் உலக மனைத்திலும் பரவிக் கிடக்கும் ஒட்டு மொத்த தமிழினத்துக்கும் ஓர் இடைக்கால அரசு ஒன்றை உருவாக்கித் தமிழினத்துக்கு என்று ஓர் அரசியலமைப்பை ஏற்படுத்திக் கொள்வதே எதிர் காலத்தில் தமிழர்களின் நலன்கள் பாதுகாக்கக் கூடிய ஓர் அரணாக அமையும்.

எனவே தமிழன் ஒவ்வொருவனும் அரசியல் சட்டத்தை மறுக்கவேண்டும். இந்திய ஆட்சியையும் வெறுக்க வேண்டும். அந்த வெறுப்புதான் தமிழினம் விடுதலை பெறச் சிறந்த ஒரு பாதையாகும்.

தமிழர்கள் வெள்ளையர்களின் ஆட்சியில் 150 ஆண்டுகள் ஆளப்பட்டு 1947 ஆம் சுட்டு 15 நாளுக்குப் பிறகு இந்தி(ய)ப் பேராட்சிக்கு 40 ஆண்டுகள் அடிமைகளாக வாழ்ந்து வருகிறோம். தற்போது இந்திய ஆட்சித் துறை அரசமைப்புச் சட்டத்தில்

தமிழர்களுக்குத் தனி மாநில அரசு என்று ஒன்று ஏற்றுக்கொண்டு இந்த அரசு செயல்பட்டாலும், இந்த அரசுக்கு என்ன அதிகாரம் உள்ளது? தமிழர்களுக்கு என்று ஏற்பட்டுள்ள அரசு தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருந்தாலும், இந்த அரசின் செயல்பாடுகள் இந்தியப் பேராட்சிக்குப் பிடிக்கவில்லை என்ருல், தமிழர்களால் தேர்தெடுக்கப்பட்ட தமிழக அரசை நீக்கி விட்டுத் தமிழகத்தின் ஆட்சியை நேரடியாகவே இந்தியப் பேராட்சி மேற்கொள்ள இயலும். இதனை எதிர்க்கத் தமிழக அரசால் இயலாது. அப்படித் தமிழகம் தில்லி யரசுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தினுலும், தமிழகக் காவல் படையினரால் தில்லி யரசுக்கு எதிராகப் போராட முடியாது. இதன் கட்டுப் பாடு தமிழக அரசிடம் இருக்கிறது என்ருலும், காவல் துறையை இயக்கும் அதிகாரிகள் ஐ.பி.எசு. என்கிற காவல்துறை உயர் அதிகாரிகள் இந்தி(ய) ஆட்சியினல் அமர்த்தப்படுவர்கள். எனவே தமிழக அரசுக்கும் இந்தி(ய)ப் பேராட்சிக்கும் போர் மூண்டா லும், மிக எளிதாகத் தோற்று விடும் தமிழக அரசு.

தன் இனமக்களின் உரிமைகளைக் கேட்கவும் பெறவும் முடியாத கையாலாகாத ஓர் அரசு, வலிமை வாய்ந்த, அதி காரமும், தமிழர்களை அடக்கவும், ஒடுக்கவும் வான், கடல், தரை சேர்ந்த அனைத்துப் படைகளையும் பெற்று இருக்கிறது. அந்தப் படைத்துறைக்கு ஆகும் செலவினங்களில் தமிழர்களின் வரிப்பணமும் அடங்கும். எனினும் ஈழத் தமிழர், தாய்த் தமிழர் போன்ற தம் தமிழ்க் குமுகாயத்தைக் காக்க மட்டும் அதற்கு இந்தி(ய)ப் பேராட்சிக்கும் எட்டிக் காயாகக் கசக்கும். இதே நிலைமையில் இன்னுமொரு தலைமுறை போனல் தமிழர்கள், தமிழ் பேசும் தமிழர்களாகவும், இந்தி பேசும் இந்திக்காரர்களா கவும் அவர்கள் போலவும் அல்லாமல், தங்கள், மொழி - கலை பண்பாடுகள், அறிவு ஆற்றல்கள் அனைத்தும் இழந்து, மாந்த விலங்கினமாக இந்தி(ய) நாடோடிகளாகத்தான் வாழ்ந்து வருவர். இதைத்தான் நமது அய்யா பாவலரேறு அவர்கள் மிக வருத்தத்தோடு அன்று மிக மனத்துயரோடு நமது இயக்க ஏடான 'தமிழ் நிலம்' இதழில் 11. 1. 87 (இதழ் எண் 78). சிங்கப்பூரில் பாலகிருட்டிணன் எனும் தமிழருக்கும், விலாசினி எனும் மலையாளப் பெண்மணிக்கும் பிறந்த சித்திரன் எனும் குழந்தைக்குக் கொடுக்கப்பட்ட பிறவிச் சான்றிதழில் தமிழன் எப்படி எல்லாம் இந்தியானுக்கப் படுகிறுன் என்பதைக் குறிப் பிட்டு அவர் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இது தமிழ் மகன் ஒவ்வொருவனும் ஆழ்ந்து சிந்தித்துச் செயல்பட வேண்டிய ஆழமான கருத்து இது போலும் கருத்துகள் - தமிழ் மக்களிடம் பரவ வேண்டும். அப்பொழுதுதான் தமிழன் தான் (தமிழன்) இன்று அடிமை நிலையில் வாழ்ந்தாலும் பல சிறப்புமிக்க வீர வரலாறு படைத்தவன், இமயம் வென்றவன், கடாரம், பர்மா இலங்கை போன்ற கடல் கடந்த நாடுகளை வென்றவன், அங்-கெல்லாம் தன் இனமானத் தமிழ்க் கொடியின் ஆட்சியினை

# நடு ஆசியாவில் புத்த கோயில்கள்! பிராமி எழுத்துகள்!

இந்தியாவுக்கும் நடு ஆசியாவுக்கும் இடையிலான உறவுகளை உறுதிப்படுத்துகின்ற மற்றொரு புதிய அடிப்படைச்சான்றைச், சோவியத்து அகழ்வாராய்ச்சி அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

சோவியத்துப் புதைபொருள் ஆராய்ச்சி அறிஞர் மார்கெல் முல்லோகந்தோவ், சோவியத்து நடு ஆசியக் குடியரசான தாகி கித்தானின் தென்பகுதியில், மணல் குன்று ஒன்றில், சிறப்பான

---

(முன் பக்க தொடர்ச்சி)

நிறுவியவன், உரோம நாட்டு அரசவைக்குத் தன் தூதுவர்களை அனுப்பி வைத்தவன், கடல் கடந்த நாடுகளில் எல்லாம் வாணிபம் நடத்தியவன், தமிழனின் வணிகம் மற்றும் போர்க் கப்பல்கள் உலக மாக்கடலில் வலம் வந்தது என்பனவெல்லாம் வரலாறு என்று ஆகும். அது மட்டுமன்றி உலகிலேயே கல் தோன்றாக் காலத்தில் தோன்றி மூத்த இனமும் மொழியும், இன்னும் உலகிலேயே முதன்முதலில் தோன்றிய மூத்த நூலாகிய திருவள்ளுவப் பேராசானால் இயற்றப் பெற்ற திருக்குறள் -மற்றும் பல இலக்கியங்களும்' இலக்கியம் உருவாக அடிப்படையான இலக்கண நூல்களும் தன் உடைமைகளாகப் பெற்ற நம் அன்னைத் தமிழ் மொழிக்குச் சொந்தக்காரர்களாகிய நம் தமிழர்கள் இலம் பாடி இந்தி(ய)க்காரர்கள் ஆ வா ர் க ளா? தமிழன் சிந்திக்க வேண்டும். தமிழர்கள் சிந்திக்கும் காலம் வந்து விட்டது.

இந்த 40ஆவது குடியரசு நாளில் நம்மைப் போன்றே வட-மேற்கில் இரண்டே முக்கால் கோடி கொண்ட இனம் இந்தி(ய)ப் பேராட்சிக்கு எதிராகப் போராடி வருகிறது. அந்த இனந்தான் சீக்கிய இனம். அந்த இனம் உலக முழுவதும் பரந்துப்பட்டுக் கிடக்கிறது.

உலக சமயங்கள் கிறித்துவம், இசுலாம், புத்தம், பாரசீகம் போன்ற சமயங்களில் சீக்கிய சமயமும் ஒன்று. ஏசுவின் தோற்றம், கிறித்துவம் தோன்றியது. மக்காவில் பிறந்த மகமது சல் நபிகளின் பிறப்பு இசுலாம் தோன்றவும், இந்தியாவில் பிறந்த புத்தரின் அற உரைகள், அறிவுரைகள் கொல்லாமை நெறிமுறைகள், கீழ்த்திசை நாடுகளில் புத்த சமயம் தோன்றவும் அடிப்படையாயின. சீக்கிய சமயம், 500 ஆண்டுகளுக்கு முன்னர் 1469ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இலாகூர் மாவட்டம் தல் வண்டியில் (இந்தியப் பகுதி தற்போது பாகித்தானில் உள்ளது) மேத்தா தாலு, திருப்தா எனும் இணையர்களுக்கு பிறந்த குரு-நானக் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டதே. பாபரின் படை எடுப்பு, அன்றைப் பஞ்சாப் மக்களைக் குருநாக்கின் (சீக்கிய மதத்தின்) பால் அவர், அவருக்குப் பின்னால் அவருடைய அவர் மக்களுக்கு அருளிய அருளுரைகளும் சிறந்த நெறிகளும், கோட்பாடுகளும் சீக்கிய சமயமாக உருவாக்கப்பெற்றன. (தொடரும்)

கட்டிட அமைப்பு ஒன்றின் இடிபாடுகளைக் கண்டுபிடித்தார். தொடக்கத்தில், அறிஞர்கள் நடுவில், இந்தக் கட்டிடம் குறித்து வேறுபட்ட கருத்துகள் நிலவின. ஆனால், கடந்த கோடைப் பருவத்தில், அங்கு சிறிய அளவிலான புத்த நினைவுத்தூண்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டன. இதன் பிறகே அறிஞர்கள் அனைவரும் ஒருமனதாக அந்தக் கட்டிட அமைப்பு, ஒரு புத்த கோயில் என்கிற முடிவுக்கு வந்தனர். அங்குக் கண்டெடுக்கப்பட்ட நாணயகள் 7ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியையும், 8ஆம் நூற்றாண்டின் முற்பகுதியையும் சேர்ந்தன எனக் கருதப்படுகிறது.

இந்த புத்த கோயில் அத்தால் நிலவெளியில், 'முங்க்நகரின் புறநகர்ப்பகுதியில் அமைந்துள்ளது. இந்தக் கோயிலில் நடுவில் புனித பீடம் அமைந்திருக்கிறது, அதனைச் சுற்றிலும் கோயில் பகுதியும், அதற்கும் முன்னே நான்கு வளைவுகளுடன் கூடிய முன்வாசல் மண்டபமும், கொண்டதாக இந்தக் கோயில் இருக்கிறது. களிமண், சுடப்படாத செங்கல் ஆகியவற்றால் இது கட்டப்பட்டுள்ளது. ஒரு மாத்திரி (மீட்டர்) உயரத்துக்கு இதன் எஞ்சிய பகுதிகளே இப்போது கிடைத்துள்ளன. சுவரில் ஓவியங்கள் இருந்திருக்க வேண்டும். சிறகடித்துப் பறந்து செல்லும் பறவைகள் கூட்டம் ஒன்றை வண்ணிக்கும் ஓவியத்தைக் கொண்ட சுவரின் சிறிய பகுதி ஒன்றே தற்போது கிடைத்திருக்கிறது. தங்க இழைகளைக் கொண்ட களிமண் பூச்சால் புத்தர் கோயில் புனைவு செய்யப்பட்டுள்ளது. கோயில் சுவரை ஒட்டியுள்ள பீடங்களில் சிலைகள் இருந்திருக்க வேண்டும். ஆனால் அந்தச் சிலைகள் கிடைக்கவில்லை.

அரேபியர்களின் ஆளுமைக்குப் பிறகு, இந்தக் கோயிலில் உள்ளூர் மக்கள் சில காலம் வாழ்ந்திருக்க வேண்டும். வீட்டுப் பயன்படு பொருள்களை அவர்கள் விட்டுச் சென்றுள்ளனர். அவர்கள் சென்ற பிறகு இந்தக் கோயில் கவனிப்பாரற்றுப் பாழடைந்தது.

அகழ்வாராய்ச்சியின் போது, பெரிய புத்த கோயில்களில் இருக்கும் பெரிய நினைவுதூண்களைப் போன்ற, சிறிய வடிவிலான தூண்களைப் புதைபொருள் அறிஞர்கள் கண்டெடுத்தனர். எடுத்துக்காட்டாகத் தெற்கு தாசிகித்தானில் உள்ள அசின தேபா கோயிலில் உள்ளது போன்ற தூண்கள், சிறிய அளவில் இங்குக் கிடைத்தன. ஒவ்வொரு சிறு தூணின் உள்ளேயும், பிராமி எழுத்துகளைக் கொண்ட வட்ட வடிவக் கல்வெட்டுகள் காணப்பட்டன. இந்தத் தூண்களும், வட்ட வடிவக் கல்வெட்டுகளும், வளைந்து நெளியும் தன்மை கொண்ட சிவப்புக் களிமண்ணால் செய்யப்பட்டுள்ளன. இந்தத்தூண்களை கோயிலுக்கு வருவோர் 'காப்புப் பொருள்களாக' வாங்கிச் சென்றிருக்க வேண்டும்.

சதுர வடிவத்தொளைகள் கொண்ட சோக்திய நாணயங்களும் இங்குக் கிடைத்துள்ளன. பழங்காலத்தில் சோக்தாவுக்கும்

# மூலிகை மலைகள்

ந. கலைமணி

தமிழகத்தின் வடவார்க்காடு மாவட்டத்தில் அமைந்துள்ள ''சவ்வாது மலைகள்'' மணம் கமழும் சந்தன மரங்கள் நிறைந்த காட்டுப் பகுதிகளைக் கொண்ட மூலிகைக் களஞ்சியமாக திகழ்கின்றன. பண்டைய தமிழ் இலக்கியங்களில் ''நவிர மலைகள்'' என்று கூறப்படுவதும், மலைபடுகடாம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ள பண்டைய தொண்டை நாட்டின் கூற்றங்களுள் ஒன்றாகிய ''பல்குன்றக் கோட்டம்'' எனப்படுவதும் இம் மலைப் பகுதிகளே ஆகும். அடர்ந்த பழங்காடுகளைக் கொண்டு கடல் மட்டத்திலிருந்து 2000 முதல் 4000 வரை உயர்ந்துள்ள இப் பகுதியின் தட்பவெப்ப நிலை பொதுவாக எல்லா மூலிகைகளும் வளர ஏற்றதாக அமைந்து உள்ளது. இங்குச் சித்த மருத்துவத்தில் பயன்படும் எண்ணற்ற மூலிகைகள் இயற்கையில் காணப்படுகின்றன. மற்றெங்கும் காணக்கிடைக்காத சில அரிய மூலிகைகளும் இங்குக் காணப்படுவது இம் மலைப் பகுதியின் சிறப்பாகும். இம் மலைக்காடுகளின் நடுவே நூற்றுக்கும் அதிகமான மலைவாழ் பழங்குடி மக்களின் கம்மங்கள் உள்ளன. இங்கு வாழும் பழங்குடிகள் பண்டைய நாகரிகமும் பண்பாடும் கொண்டவர்களாக வாழ்கின்றனர் இவர்கள் ஆதி காட்டு வாழ்நர்கள் அல்லர்; ஏதோ காரணம் பற்றி அங்குக் குடியேறியவர்கள் ஆவர். இவர்கள் பெரும்பாலும் வளமான உடலமைப்புடன் வாழ்கின்றனர்.

இம் மலைக் காடுகளில் அரிய மூலிகையான எருமைகனைச்சன், திறிபலை, சிறுபஞ்ச மூலம், சித்திரை மூலம், ஓர் இதழ்த் தாமரை, மகாவில்வம், செந்நாய் உருவலி, சிறு குறுஞ்சா

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

தோஅரித்தானுக்கும் இடையில் நிலவிய வணிகத் தொடர்புகளுக்கும், சோக்ம்தாவில் புத்த மதத்தை ஏற்க மறுத்த பின்னல், அங்கிருந்த புத்த மதத்தினர் தோஅரித்தானுக்குக் குடிபெயர்ந்திருக்க வேண்டும் என்பதற்கும் இந்த நாணயங்கள் சான்று பகர்கின்றன என வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள்.

அத்தால் நாட்டு அரசனும், மக்களும் ஈனயான புத்தமதப் பிரிவைப் பின்பற்றினர்கள் என்றும், அங்குப் புத்தத் துறவிகள் இருந்தார்கள், புத்த மடாலயங்கள் இருந்தன என்றும் ஒய்சாவோ என்கிற நாடுகாணி கி. பி. 726- இல் எழுதியிருப்பதுடன், இந்தக் கோயிலின் கண்டுபிடிப்பு பொருந்தி வருகிறது. அத்தால் நிலப் பகுதியில், கண்டுபிடிக்கப்பட்டுள்ள முதல் புத்த நினைவு எச்சம் இதுவே. காலத்தின் தொடக்கத்தில் இந்தியாவுக்கும் ஆசியாவுக்கும் இடையில் இருந்த உறவுகளை இது வெளிப்படுத்துகிறது. நடு ஆசிய மக்களுக்கும் இந்திய மக்களுக்கும் இடையிலான கலை, பண்பாட்டுப் பரிமாற்றத்தில் புத்தமதம் ஒரு முகாமை உருப்பாக விளங்கியது. —விந்தர் சோலாவியோவ்

வசம்பு, வல்லாரை, காட்டு மிளகு, காட்டு மஞ்சள், காட்டுக் கரணை, மிளகரணை, கருநொச்சி, எட்டி, வடுகன் ,வக்கனை, விளாரி, தரணி, கல்லில் முளையான், வேங்கை, தேவதாறு, சந்தனம், குங்கிலியம், எலுமிச்சைப் புல், கற்பூரப்புல், கற்பாசி, கல்பனை, கல்துருஞ்சி, கல் அரசன், கருமருது, கரும்துளசி, புளி-யாரை, சிறு நன்னாரி. பெருநன்னாரி, அமுக்கிருக் கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு, கலப்பைக் கிழங்கு, கூந்தல் பனை, காட்டுப் பலா, சீந்தில், ஈசுவர மூலி, நாலு முந்திரி, கட்டுக் கொடி, அமுத வல்லி, முட்சங்கு, விடத்தாரை, வெள் அருகு, வெள் எருக்கு, கரு ஊமத்தை, பேய்முடக் கருத்தான், காட்டு முருங்கை, இரணக்கள்ளி. முப்பிரண்டை, அழுகன்னி, சன்னிக் கோவை, காட்டுப் பாகல், நஞ்சிமுறித்தான், ஆடுதீண்டாப்-பாலை, நல்வேளை, நாய் வேளை மற்றும் பல மூலிகைகள் பெரும் அளவில் கிடைக்கின்றன. அறிமுகம் இல்லாத காட்டுப் பகுதிகளில் அங்குள்ள பழங்குடி மக்களின் துணையின்றிச் செல்ல முடியாது.

இங்குக் கிடைக்கும் தேன் புகழ் மிக்கதும் பல மருத்துவக் குணங்களை உடையதுமாகும்-

தேன்: இதற்கிணையானது இதுவே ஆகும். எளிய சர்க்கரை, தாதுப்புகள், (வைட்டமின்) உயிர்ச் சாரங்கள் ஆகியவற்றை இயற்கையிலே கொண்டு அருமையான எளிதில் குருதியோடு கலக்கக் கூடிய உணவு. இ'து அதிகமான ஆற்றலைக் கொடுக்கும். அரிய, எப்போதும் கெடாத எத்தனை ஆண்டுகளுக்கும் சேமித்து வைக்கக் கூடிய தனிச் சிறப்பு வாய்ந்த ஓர் உணவு, தேன்.

நன்றி: சித்தர் செயல்'

---

## இதழ் விற்கும் முகவர்கள், அன்பர்கள் கவனத்திற்கு

***தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு-*** ஆகிய இதழ்களை விற்பனை செய்யும் முகவர்களாலும் அன்பர்களாலும் நாம் படும் தொல்லைகளுக்கும், அடையும் இழப்புகளுக்கும் அளவில்லை. அவர்கள் பட்டியல் தொகைகளைத் குறித்த காலத்தில் அனுப்புவதில்லை. சிலர் நிறைய நிலுவை வைத்திருக்கிறார்கள். சிலர் ஏமாற்றும் நோக்கத்துடன் தொகை விடுக்காமலும். எழுதும் நினைவூட்டு மடல்களைப் பொருட்படுத்தாமலும் உள்ளார்கள். இந்த மாத இறுதிக்குள் அவர்கள் தம்தம் நிலுவைகளை எச்சமின்றி விடுத்துக் கணக்கை சரிசெய்து கொள்ள வில்லையானால், அடுத்த மாதத் தொடக்கம் முதல் கட்டாயம் இதழ்கள் விடுப்பது நிறுத்தப் பெறுவதுடன் சட்டப்படியான நடவடிக்கைகளும் எடுக்கபெறும் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். **-அமைச்சர்.**

## 1. தமிழ் நாட்டில்

சமசுகிருதத்திற்குப் பல்கலைக்கழகம் - பணிகள் - ஆசிரியர் பயிற்சி நிலையங்கள், நாற்றங்கால் பள்ளிகள் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் நடுவில் பயிலாத ஒரு மொழியை வளர்க்க ஒரு கும்பல் உள்ளது. மக்கள் மொழியை மதிவளர்-தமிழைப் பயிலவும், காக்கவும், முயற்சி இல்லை. ஏன்?

கலை, பண்பாடு சார்ந்த ஒப்பந்தங்கள் நாட்டுக்கு நாடு ஏற்படுத்தப் படுகின்றன. அவை எந்த அடிப்படையில் உரு-வாக்கப் படுகின்றன? ஆள்வர்க்கே வெளிச்சம்!

இந்திய சோவியத்து நட்புறவுக் கழகத்தின் துணைத்தலைவர் - தமிழ்நாடு கிளை - பி. கிருட்டிணன், "உருசிய மொழிக்கும், சமசுக்கிருதமொழிக்கும் பல பொதுத் தன்மைகள் உள்ளன", என்று கூறியுள்ளார். தமிழ் நாட்டில் வாழ்ந்து கொண்டு, தமிழைப் பேசிப் பிழைத்துக் கொண்டு, 'எந்த ஆட்சி யதிகாரம்' கருதி இந்த பர். பி. கிருட்டிணன் பேசியுள்ளார்? வாழும் தமிழுக்கும் வளர்ந்து வரும் உருசிய மொழிக்கும் ஒப்புமை உண்-டென்றுல் பேசலாம். தமிழர்களுக்கு எந்தவகையும் ஒட்டிலாத-தமிழர்களை ஒடுக்கிவந்த சமசுக்கிருதக் கருவியைத் 'தூக்கி'க் கொண்டு திரிவதேனோ?

உருசியரிடையே, தமிழர் பண்பாட்டைச் சமசுக்கிருதத்தில் தேட - ஆராயத் தூண்டும் முயற்சி தானோ இது!

தமிழ் நாட்டுத் தலைவர் —<br>
குடியரசுத் தலைவர் —

சமயவாணர் எல்லாம் 'செத்துப்போன' ஒன்றை - எடுத்துப் பேசுவது - ஏற்றிப் பேசுவது ஏன்? மக்கள் வழக்கின்றிப் போன மொழியை ஒப்பிட்டுப் பேசு மிடமா, மக்கள் உறவை வளர்க்கும் அமைப்பாக இருக்க முடியும்?

## 2. 'கால் நடை' வாழ்க்கை!<br>'ஏவுகணை' எண்ணம்!

தமிழ் மக்கள், உழைக்கும் மக்கள். அவர்கள் 'நடையனா'ய் மெலிந்தும் தேய்ந்தும் போனார்கள். அவர்கள் 'கால் நடை'யாய் மதிப்பிழந்து வருகின்றார்கள். இவர்களின் பண்பாட்டு வளம், சிந்தனைச் சாரம் உயர்வாக உள்ளது. 'உள்ளுவ தெல்லாம் உயர் வுள்ளல்' என்ற அறப்பண்பு ஆழப்பதிந்து விட்ட மக்க-ளிடம் முன்னேற்றம் இல்லையே, ஏன்?

'நிலையும் நினைப்பும்' பற்றிப் பேசினரே 'அறிஞர் அண்ணா'. அந்தத் தமிழர்கள் முன்னேற்றம் கண்டு விட்டார்களா? 'கழக உடன் பிறப்புகள்' 'குருதியின் குருதி' என்போர் நினைத்துப் பார்த்தல் வேண்டும்! அறியாமை, அடிமைத்தனம் நீங்க வில்லை. அதற்கான விழிப்பியக்கம் தீவிரபடவில்லை;

ஆசிரியர் சிலரிடம் பேசிப் பாருங்கள். அவர்கள் நாட்டின் தீர்வு எம். சி. ஆரிடம் உள்ளதென்கின்றார்கள். எந்தப் போராட்டமும் செல்லுபடி ஆகாது எண்கின்றார்கள். ஆயிரம் வீர வரலாறுகளை வயிற்றை எக்கிக் கொண்டு பேசுகின்றவர்களிடம் தன்னம்பிக்கை 'பாலாறு' போலப் பாலையாகிக் கிடக்கிறது. எண்ணிப் பார்த்திடின் நமது வேலையில் தீவிரம் தேவை என்பது புலப்படும், தொடர்ச்சியான வேலைத்திட்டம் வேண்டும் என்பது விளங்கும்!

எம். சி. ஆர்க்குப் பிறகுதான் ... கோரிக்கை, போராட்டம் எல்லாம். அவர் 'விரும்பினால் உண்டு; இல்லையேல் இல்லை' என்கின்ற ஆசிரியர்களிடம் என்ன சொல்வது?

அவர்களிடம் தனிமாந்த வழிபாட்டுணர்வு மேலோங்கி இருப்பது அவலமானதாகும்! ஏழை மக்களிடம் பாராளுமன்ற, ஆட்சியும், மக்கள் நாயகமும் உள்ளன! அவர்கள் தங்களை ஏறி மிதிக்கவும் துவைக்கவும் ஒப்போலை தந்து கொண்டிருக்கின்றார்கள்! அவர்களை வீறு மிக்கவர்களாகக் காண்கின்றோம்; ஆனால், அந்த வீறு அமைப்பாக இல்லை; படையாக இல்லை. அமைப்பும், படையும் 'எதிரி'களின் கையில் பறிபோய் விட்டன. அவற்றை மீட்சி செய்யும் இயக்கம் வேண்டும்! வளமான சிந்தனையும் போராட்ட எழுச்சியும் எழுந்து மடிந்து போகாமல் காக்க ஓரமைப்பு வேண்டும். அதனைக் கட்டியெழுப்பும், ஈகம், முயற்சி வேண்டும்!

இராசீவ் காந்தி கூறும் 21 ஆம் நூற்றாண்டு 'அவர்களால்' - ஆளும் கணத்திற்கு - இயலக் கூடியதே! அவர்கள் ஏவுகணையிலிருந்து கொண்டு ஏவுகணைக் கனவை மக்களிடம் உருவாக்க முயல்கின்றார்கள்! தங்கள் 'வாழ்க்கை' யை நிலைப்படுத்திக் கொள்ள மக்களிடம் 'கனவை' ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்! அவர்கள் 'மக்களிடம்' முதலாளியச் சிந்தனை முனை மழுங்காமல் பார்த்துக் கொண்டு, அதே வேளை, அவர்களை 'எடுத்து விடாமல் கோயில்களுக்கும், திரைப்படக் கொட்டகைகளுக்கும் அனுப்பிக் கொண்டிருக்கின்றார்கள். — பார்த்துக் கொள்ளவும் செய்கின்றார்கள்!

'விலங்குகள் போல் வாழ்வதில்லை' என்று முடி வெடுத்துப் போராடி எழுதல் வேண்டும். ஆனால், விலங்குகள் உணவைப் பார்த்தும் பட்டினி கிடப்பதில்லை. வேலி தாண்டியும், பறித்துண்ணக் கூடியது விலங்கு. மாந்தனே பண்பாடு என்ற பேரில் பட்டினி கிடப்பவன். பட்டினிக்கான காரணம் அறிந்தும் கட்டுப்பட்டுக் கிடப்பவன் மாந்தனே? இல்லை. பிறர் நோவ வாழ்தல் கூடாதுதான். அதற்காக நம் நோவுக்குக் காரண மாணவர்களைச் சும்மா விட்டு விடுதல் எவ்வகையில் நன்றாகும்! நாம் இன எழுச்சிக்கான விடுதலைப் பண்பை வளர்த்துக் கொள்வோம்!

## 3. சித்த மருத்துவம்!

சித்த மருத்துவம், நாட்டு மருத்துவம் எனப் பொருத்தமாக வழங்கப் பெறுகின்றது. இது குடும்பங்களில் நடைமுறையில் உள்ளது. இதனைச் செவி வழியாகக் கேட்டு அறிந்து கொள்கின்றனர். முதிய பெண்கள் — பட்டறிவு கொண்டு கூறிவரும் மருத்துவ முறையைப் பாட்டி மருத்துவம் எனவும் கூறுவர். தமிழ் நாட்டு மருத்துவத் துறையில் இதற்கான ஆராய்ச்சி வளர்தல் வேண்டும். பழைய நம்பிக்கைகளுக்கும், ஏட்டில் கிடைக்கும் செய்திகளுக்கும் உள்ள உறவுகளை நன்கு புரிந்து கொள்ளும் முயற்சி வேண்டும்.

அறிஞர். சேதுரகுநாதன் போன்றவர் கொண்டுள்ள சைவம், தமிழ், மருத்துவம் பற்றிய நம்பிக்கைகளை நாம் கணக்கில் கொள்ளுதல் வேண்டும். 'நம்பிக்கை' மூலம் தேடப்படும் 'உண்மைகளை' மேலும் உசாவி, ஒப்பிட்டு அறியும் ஆய்வகங்கள் பெருகுதல் வேண்டும். ஆராய்ச்சி அறிஞர்களின் 'துறை நம்பிக்கை'யினை நாம் போற்றுதலும் தேவை. அவர்களே, உண்மை தேடுதலில் உறுதிகாட்ட வல்லவர்கள்!

அறிவும் அறியாமையும் கலந்து கெட்டிப்பட்டுப்போன அமைப்பில் வாழ்கின்றதை நாம் மறந்து விடுதல் கூடாது.

கி. ஆ. பெ. விசுவநாதம், மணலி கந்தசாமி போன்றவர் என் நினைவுக்கு வருகின்றனர். நாம் அரிதின் முயன்றறிய வேண்டுவன பல. அவற்றில் 'மருத்துவம்' பற்றி அறிய மருத்துவர், மருத்துவச்சி, பண்டுவம், பண்டுவச்சி என வாழ்ந்து மறைந்து வரும் மக்களிடம் தேடல் முயற்சி செய்தல் நலம் எனக் கருதுகின்றேன்.

சௌராட்டிர மக்களில் 'நடன கோபால நாயகி' என்பவர் தமிழ் நாட்டில் நாட்டு வருத்துவம், கலை பண்பாட்டைப் பரப்புவதில் அக்கறை கொண்டிருந்ததை நாம் மறுத்தல் ஆகாது.

அறிஞர் பெருஞ்சித்திரனர் நாட்டு மருத்துவம், தமிழ் மருத்துவம், இதனைப் போற்றுதல் தமிழின எழுச்சிக்குப் பயன்படும் எனக் கண்டறிந்தார். அவர்தம் வேண்டுதலை ஏற்றுத் தமிழக அரசு மருத்துவத்துறையில் 'சித்த மருத்துவம்' போற்றப் பெறுகிறது என்று நம்புகிறேன்.

---


# "தென்மொழி"

**சென்னை-5.**

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | | |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | : | உருபா 20.00 |
| அரையாண்டுக் கட்டணம் | : | ,, 10.00 |
| தனியிதழ் | : | ,, 1.75 |

ஓரிதழுக்கு உருபா 3.50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க !

பக்கம்! (ஆரியர் — திராவிடர் என்பது இல்லை என்பவரைச் சாடுவது) குழப்பங்கள் நிறைந்த கூடாரம், தென்மொழி என்றும் — குழப்பக் கருத்தாளர்கள் (வாதிகள்) சூழ்ந்த எழுத்தாளர்கள் கூடாரம் தென்மொழி — தமிழ் நிலந்தாம் என்பதும் புலனாகின்றன. நன்றி

—இலால்குடி நாகராசன். திருச்சி.4

O: *1226:* பெருந்தகையீர், வணக்கம். உங்கள் மடல் கண்டவுடனேயே தமிழகத்திலுள்ள உறவினர்க்கு மடல்எழுதி என் பெயரில் தென்மொழிக்கு ஆண்டொப்பம் கட்டச் சொல்லியிருந்தேன். இட்ட பணியைச் செய்கிறார்களோ, என்னவோ? கடிதம் எழுத அவர்களுக்கு இயலுவதில்லை! தொகை விடுக்கப் பெற்று விட்டதை உறுதிப்படுத்திக் கொண்டு உங்களுக்கு மறுமொழி எழுத முனைந்ததே சுணக்கத்திற்குக் கரணியம். இங்கிருந்து பணம் அனுப்ப இயலாத நிலை. என் பொருளியல் குடும்பச் சூழல்களைப் பாவலரேறு ஐயா அவர்கள் நன்கறிவார்கள். தென்மொழியோடு நான் கொண்டுள்ள தொடர்பு வெகுநாளையது. என் பெயரில் ஆண்டொப்பம் இருப்பதில்லை என்றாலும், அவ்வப்போது நண்பர்கள், உறவினர்கள் வழித் தென்மொழி பெற்று மகிழ்வேன்.

இங்கே கணிசமான அளவில் தமிழர்கள் உள்ளனர். எனினும் நல்ல செயலெதற்கும் அவர்கள் துணை போவதில்லை. ‘தென்மொழியில், வரும் கடிதங்களைப் போட்டே பக்கங்களை நிரப்பி விடுகிறார்கள் ;ஜ, ஸ போன்ற எழுத்துகளைத் தமிழ் என்கிறார்களே’ என்றெல்லாம் வேண்டாத பெண்டாட்டி கைபட்டால் குற்றம் என்பதுபோல் பொய்க் கரணியங்களைச் சொல்வர். தமிழ் மொழிக்கும் இனத்துக்கும் ஊறு செய்யும் அரை வேக்காட்டு இதழ்களை வாங்கி விரும்பிப் படிப்பர். அண்மையில் இலண்டன் முருகன் கோயில் வழிபாட்டு நிகழ்ச்சியினைத் தொலைக்காட்சியில் காட்டினார்கள். வழிபாட்டின் போது மந்திரங்களெல்லாம் வடமொழியிலேயே சொல்லப் பெற்றன. எத்தனையோ ஆண்டுகளாகச் சொல்லிப் பார்த்து விட்டோம். பெரும்பான்மையான தமிழரின் அடிமை மனப்பாங்கு அகலவே இல்லை. தங்கள் நற்றொண்டு தொடர்ந்து நடைபெறுவதாக. அன்புடன்,

—அரங்க முருகையன், இலண்டன் மேற்கு *(13)*

O: *1227:* அன்பார்ந்த ஐயா அவர்களுக்கு, அன்பான வணக்கங்கள். தங்களை 10-2-87 அன்று சந்தித்தேன் என்று எண்ணுகிறேன். ஐயாவிடம்—அன்று. சரியாக அளவளாவ காலமும் நேரமும் ஒத்துழைக்க வில்லை. (எனது அன்னை மறைந்து கொஞ்ச நாள்களே ஆகியிருந்தன.) எனினும் தங்களைச் சந்தித்ததை பெரும்பேறாக எண்ணுகிறேன். தற்போதைய ஈழ நிலவரத்தில் தங்கள் கருத்துகளைத் தென் மொழி, தமிழ்நிலத்தில் எழுதுங்கள். தமிழ்நிலம் புதிய முகப்புடன் வருவது கண்டு மகிழ்ந்தேன். ஆனால் தொடர்ந்து சரியான கிழமைகளில் வருவதில்லையே! ஏன்?

அலுவலகப் பணிகளோடு, தங்களது உடல் நலத்தையும் சற்றே கவனியுங்கள். தென்மொழி சுவடி 23; ஓலை 5 இல் எழுதியுள்ள ‘‘இந்தியாவில் எடுத்த எடுப்பில் பொருளியல் புரட்சியை உருவாக்க முடியுமா’’ —ஆசிரியவுரை எனது எண்ணத்தை முழுவதுமாக வெளிப் படுத்துவதாக இருந்தது. தொடர்ந்து எழுதுங்கள்; முடிவில் என் கருத்தை எழுதுகிறேன். தங்களது வெளியீடான நூற்களை தென்மொழியில் விலைபட்டியலோடு எழுதுங்கள். எராளமானோர் வாங்கிப் பயன்பெற உதவியாக இருக்கும். —த. தேனியல் செபராசு, பிலாய் (ம.பி)

ஓ: 1228: பெருமதிப்பிற்குரிய அரிமா பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயா அவர்களுக்குப் 'பாவேந்தர் தமிழ் இயக்கச்' செயலர் கோவி. செந்தமிழன் விடுக்கும் நன்றி மடல்.

சென்ற 1-6-1987 திங்கள் புதுவை கம்பன் கலையரங்கில் நடந்த பாவேந்தர் விழாவில் பாட்டரங்கத் தலைமையேற்றுச் சீரும் சிறப்புமாக விழாவினை நடத்தித் தந்தமைக்கு மிக்க நன்றி. அவ்விழாவில் எம் இயக்கத்தவர் மேலும் வளர்ச்சி பெற அரிய பல கருத்துகளை எடுத்துரைத்தீர்கள். மேலும் இத் தமிழினம் விடிவு பெற ஒவ்வொரு மாந்தனும் எடுக்க வேண்டிய முயற்சியினைத் தெளிவுற எடுத்துரைத்தீர்கள். மிக்க நன்றி. தங்கள், —கோவி. செந்தமிழன், அறி.இ; புதுவை-1

ஓ: 1229: பேரன்புகெழுமிய ஐயா, வணக்கம். இத்துடன் தமிழ்ச்சங்கத் தொடக்க விழாச் செய்தியினை விடுத்துள்ளேன் முசிறியில் கற்றோர் அனைவரும் தங்கள் உரையின் கருத்தாழத்தினைப் பாராட்டுகின்றனர். தங்களின் சொற்பொழிவே தலை சிறந்தது எனவும், இன்றைய தேவையினை அழுத்தமாகவும், ஆழமாகவும் உரையாற்றிய கற்றறிந்த சான்றோர் இவர் ஒருவரே என்றும் வியக்கின்றனர். அன்புடன்.

—த. கரிகாலன், முசிறி.

ஓ: 1230: தோன்றின் புகழொடு தோன்றுக என்கின்ற வள்ளுவப் பெருந்தகையின் வாசகத்தை மெய்யாக்கிக் காயத்தைக் கலந்து அதில் தமிழ்மணம் பரப்பிவரும் தேசத்தின் பாவலரே! தமிழ்த்தாயின் தலைமகனே! அறிவைத் தோண்டித் தமிழ்ஆற்றல் கணைகளைச் செறிவாய் தமிழர்களிடையே ஏவுகின்றீர்கள்! வியப்பு மிகும் நல் வியத்தகு மாற்றம் காண்போம்! தென்தமிழைத் தேன்மொழியாய்ச் சிட்டாகப் பறக்கவிட்டீர்! சிறகடித்துப் பறக்கும் சிந்தனை மொழியாகவும் தமிழ் ஊற்றினின்று வெளிப்படும் பாலாறே! தேனாறே! குகைவாழ் சிறுநரியாய் வாழாது கொடுங்காட்டுத் தமிழ்காக்கும் கடும்புலியாய் வாழ்கின்றீர்! தமிழ்மகளும் அச்சமின்றித் துள்ளி விளையாடுகின்றாள். தங்கள் உயர்ந்த கொள்கைகளும் தந்நலமற்ற பற்றும், தணியாத தாகமும் குறையாத வேகமும், தமிழ். தமிழ் என்று வருகின்ற மூச்சும், வையத்திலே காண்போரை அடிபணிய வைக்கு மையா! புதிய புதிய படைப்புகளைப் படைக்கின்றீர்! என்றும் புகழ்மிகு தமிழ்த்தாயின் மடியினிலே தவழ்கின்றீர்! தாங்கள் தமிழ்த்தாய் பெற்றெடுத்த செல்லப்பிள்ளை! பெற்றவள் அவளன்றோ பெருமைப்பட வேண்டும்! பெற்றெடுக்கும் ஒவ்வொரு படைப்பும் புதுப்பிறப்பு! இதுவே தங்கள் பிறப்பின் தனிச்சிறப்பு. வாழிய ஐயா! வாழிய என்றும்! பல்லாண்டு! பல்லாண்டு!

இப்படிக்கு, தங்கள் பாதச் சுவடுகளை நாடிவரும் பாலகன்,

—மன்றவாணன். சென்னை-1

ஓ: 1231: தமிழ் நலஞ்சார்ந்த பெரியீர்! வணக்கம். அண்மையில் தமிழ்த் தாளிகையாளர்கள் அனைவரும், 'விகடன் ஆசிரியரை விடுதலை செய்க' என ஒட்டு மொத்தமாக[illegible] குரல் தந்து வெற்றி யடைந்ததாகச் செய்தியறிந்தோம். அனைவ[illegible]க்கும் நன்றி!

சென்ற முறை ''வணிக ஒற்றுமை'' ஆசிரியர் தளை செய்யப் பட்டபோதும், பாவலர் ''இன்குலாப்'' அவர்களை எதிர்த்துச்

(தொடர்ச்சி 16- ஆம் பக்கம்)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. (தமிழகம்)